காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

8—8—71

★

உள்ளே......

போதை தரும் புராணம்
(அறிஞர் அண்ணா)

வன்முறைக்குத் துணையா?
(தலையங்கம்)

சலோ டில்லி!
(கட்டுரை)

சிவன் சொத்து?
(சிறுகதை)

சோழமாதேவி
(தொடர் கதை)

விலை 20 காசு



அமைச்சரவை அளித்த பாராட்டு விழாவில், முதல்வ
டாக்டர் கலைஞருக்கு, அமைச்சர்களனைவரின் கையெழுத்து
இடம் பெற்ற கேடயம் ஒன்றினை வழங்கினார்
தமிழக ஆளுநர் கே. கே. ஷா

கல்லூரி போகாத கருணாநிதிக்கு டாக்டர் பட்டமா?—என்று கேட்டுப் பெருமூச்சு விடுவோருக்குப் பதில் தருகிறது இந்தக் கட்டுரை. 1-8-'71 'ஜனசக்தி' இதழில் வெளிவந்த கட்டுரையின் சில பகுதிகளைத்தான் நீங்கள் படிக்கப் போகிறீர்கள் !

கருணாநிதிக்கா பட்டம்?

தா. பாண்டியன். எம்.ஏ., பி.எல்.,

பட்டமா? அதுவும் டாக்டர் பட்டமா? போயும் போயும் கல்லூரிக்குள் காலடி எடுத்துவைக்காத கருணாநிதிக்கா? இது அநியாயம் என்று சிலர் சீறியிருக்கிறார்கள்.

மாணவர்கள் சிலர் இதே உணர்வால் ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்.

பட்டமளிப்பு விழா, தடியடி விழாவாக மாறியிருக்கிறது. மாணவர்கள் பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். போலீசார் பல்கலைக் கழகத்திற்குள் நுழைந்து தடியடிப் பாடத்தைக் கற்பித்திருக்கிறார்கள்.

நடந்துள்ள சம்பவங்கள் கசப்பானவை! கண்டிக்கத்தக்கவை!

ஆனால், போராட்டத்தின் மூல காரணத்தையும் ஆராய்ந்தாக வேண்டும்.

இவருக்கா பட்டம்?

கருணாநிதி பல்கலைக் கழகத்தில் படிக்காதவர். பட்டம் பெறாதவர். அவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்குவது சரியல்ல என்ற கோபத்திலிருந்துதான் போராட்டமே முளைத்திருக்கிறது.

மாணவர்கள் மட்டும் அல்ல அண்ணாமலைப் பல்கலைக்கழக வட்டத்தில் மட்டும் அல்ல, தமிழ் நாட்டில் சந்திக்கின்ற பல படித்தவர்கள் மத்தியிலும் இதே உணர்வைக் காண முடிகிறது. படித்தவர்களுக்கு உள்ள "ஓசத்தி" மனப்பான்மை (Superiority Complex) படிக்கும் வாய்ப்பினை பல்வேறு காரணங்களால் இழந்தவர்களை இழிவாகக் கருதும் தரங்கெட்ட நிலைக்குத் தள்ளியிருக்கிறது.

பல்கலைக் கழகங்கள் சிலரைக் கௌரவிப்பதற்காக டாக்டர் பட்டங்கள் வழங்குவது பல காலமாக நடந்துவருகிறது. பொதுக்கூட்டங்களில் மாலை, துண்டுகள் போடுவதைப்போல, கவிஞர்களுக்குப் பொன்னாடை போர்த்துவதைப்போல, பல்கலைக் கழகங்கள் டாக்டர் பட்டம் வழங்குகின்றன. இது தகுதிச் சான்றிதழ் அல்ல. படித்துத் தேறிப் பெறும் பட்டத்திற்குத்தான் தகுதிச் சான்றிதழ் என்று பெயர். கௌரவ டாக்டர் பட்டங்களை யாரும் வேலை வாங்குவதற்காகப் பயன்படுத்துவதில்லை. இதை ஏனோ படித்த பலர் படிக்காமல் விட்டிருக்கிறார்கள்.

இங்கு மட்டுமா?

அண்ணாமலைப் பல்கலைக்கழக நிகழ்ச்சிகள் நமக்கு வேறு பல சம்பவங்களை நினைவூட்டுகின்றன. ஒருமுறை இலக்கிய மேதை மாக்சிம் கார்க்கியை பாரீஸ் பல்கலைக்கழகத்தில் பேச மாணவர் பேரவை அழைப்புவிட்டது. பாரீஸ் பல்கலைக்கழகச் சட்ட விதிகளின்படி, பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் மட்டும்தான் பேசலாம். அந்த விதிப்படி, மாக்சிம் கார்க்கிக்கு, நீங்கள் படித்த கல்லூரி எது? வாங்கியுள்ள பட்டம் என்ன? என்ற கேள்விக் கடிதத்தை அனுப்பினார்கள்.

மாக்சிம் கார்க்கி, பல்கலைக்கழகத்தில் படித்தவர் அல்ல, "நான் உலகம் எனும் பல்கலைக்கழகத்தில், மக்கள் எனும் முடிவுறு இலக்கியத்தைக் கற்று வரும் மாணவன்" என்று பதில் எழுதினார். மாக்சிம் கார்க்கி பேச அனுமதிக்கப்படவில்லை. இதன் விளைவாகத்தான் "My University" "எனது பல்கலைக்கழகம்" என்ற நூலை மாக்சிம் கார்க்கி எழுதினார்.

இன்றைக்கு அதே பாரீஸ் பல்கலைக்கழகத்தில் மாக்சிம் கார்க்கியின் படைப்புக்கள் இலக்கியத்திற்கான பாடப் புத்தகங்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

புரட்சிக் கவிஞன் ஷெல்லி

இதேபோல் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பயின்றுவந்த கவிஞர் ஷெல்லி, நாத்திகம் பற்றிய புத்தகத்தை எழுதியதற்காக, பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டான். இதே நூலைத் தமிழில் மொழிபெயர்த்ததற்காக ஜீவா இங்கே தண்டிக்கப்பட்டார்.

ஆனால் வெளியேற்றப்பட்ட அதே ஷெல்லியின் கவிதைகளை ஆராயத் தனித் துறையையும், அதில் சிறப்புப் பெறுவோர்க்கு டாக்டர் பட்டங்களையும், அதே பல்கலைக்கழகம் வழங்கிக்கொண்டிருக்கிறது.

வள்ளுவனும் பாரதியும்

இங்கே தமிழகத்தில் பல்கலைக்கழகங்களில் கட்டாய பாடமாகப் பயில்கிறோமே திருக்குறள், அதைப் படைத்துத்தந்த வள்ளுவர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவரா? கவிச்சக்கரவர்த்தி கம்பன் பெற்ற பல்கலைக்கழகப் பட்டம் எது? பாரதிக்கும், பாரதிதாசனுக்கும் பல்கலைக்கழகங்கள் தந்த பட்டங்கள் எது?

பட்டம் பெறாததால் இவர்கள் எல்லாம் தாழ்ந்தவர்களா? மாறாக, பட்டம் பெறாத இந்த மேதைகள் எழுதியவற்றைப் படித்து எழுதுவதற்குத்தான் பட்டம் வழங்கப்பட்டு வருகிறது.

இதனால் கல்வி வேண்டாம் படிக்காத மேதைகளே மேல், என்று மொட்டையாக வாதிடுவதாகவும் கொள்ளவேண்டாம்.

படிப்பு மூளையைக் கூர்மைப்படுத்துவது உண்மை. பதப்பட்ட அந்த சிந்தனையைப் பெற்றவர்களுக்கு 'அகங்காரம்' 'டம்பம்' தேவை இல்லை. தன்னைத்தானே அறிவாளி என்று நினைப்பதுகூட

(4-ம் பக்கம் பார்க்க)



காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறு மாத சந்தா ரூ. 5

மலர் 8 | 8—8—71 | இதழ் 4

குற்றத்துக்குத் துணையா?

சிதம்பரம்—அண்ணாமலை நகரில் சென்ற கிழமை நடைபெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக, ஒரு இளைஞர், பிணமாக மிதந்ததைத் தொடர்ந்து, பள்ளி ஆசிரியர் ஒருவர் குளத்தில் மிதந்தது தன் மகனாக இருக்கலாம் என்று முதலில் தெரிவித்துவிட்டு, பிறகு பிணத்தின் புகைப் படத்தைப் பரிசீலனை செய்து, அது தன்னுடைய மகன் அல்ல என்று அதிகாரிகளிடம் எழுத்து மூலம் தெரிவித்திருக்கிறார். ஆனால், அந்த ஆசிரியரின் மகன்—இளைஞன்—ஒருவன், அதே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்தவனைக் காணவில்லை என்பதும் அவரது முறையீடு.

அதாவது யாரோ ஒரு இளைஞன் மடிந்திருக்கிறான்; இன்னொரு இளைஞன் காணாமற் போயிருக்கிறான். இது இப்போதைய நிலைமை.

இது தொடர்பாக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், குறிப்பிடும்போது, இறந்தது மாணவர்தான் என்பதை யாரும் நிரூபிக்கவில்லையென்றும், மாணவர்களோ, ஆசிரியர்களோ கூடயாரும், அந்தப் பிணத்தை, ஆசிரியருடைய மகனும், காணாமற்போயிருப்பவருமான உதயகுமார் என்ப்வர்தான் என அடையாளம் காட்டப்படவில்லை என்றும், அவ்வாறு, அந்தப் பிணம், ஒரு மாணவருடையதுதான் என்று நிரூபிக்கப்பட்டால், அரசு அதனை மறைக்கத் தேவையில்லை என்றும் வெளிப்படையாகவே தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாகவே, குளத்தில் மிதந்தவரின் புகைப் படத்தை. தமிழக ஏடுகள் அனைத்திலும் பிரசுரிக்கச் செய்து அடையாளம் தெரிந்தவர்கள் அது பற்றித் தகவல் தரலாம் என்றும் போலீசுத் துறை அறிவித்திருக்கிறது.

அதன் பிறகு கூட, அந்தப் பிணத்தைப் பற்றிய எந்தத்தகவலும், எந்த மூலையிலிருந்தும் வெடித்துக் கிளம்பவில்லை. ஆசிரியர் பெருமாள்சாமி என்பவர் மறுத்து விட்டதுபோல, வேறு எந்தவொரு குடும்பத்தாரும் தன் குடும்ப உறுப்பினர்தான் அந்நப் பிணம் என்று உரிமை கொண்டாடுகிற தகவல் கூட இல்லை.

ஆகவே, குளத்தில் கண்டெடுக்கப்பட்ட பிணத்திற்கும், உதயகுமார் என்பவருக்கும் முடிச்சுப்போடு சில வெறும் வாய்களுக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

இந்நிலையில் 'நவசக்தி' என்ற காங்கிரஸ் நாளேடு நாள்தோறும் தன் ஏட்டில் மாணவர் உலகின் ஆத்திரத்தைக் கிளறி விட்டுக் கொண்டு வருவதுடன் இறந்த அந்தப் பிணம் உதயகுமார்தான் என்று வலியுறுத்திக்கொண்டும் வருகிறது.

இதேவேளையில், உதயகுமார் என்பவரின் தந்தையான பெருமாள்சாமி என்பவர், முதலில் அந்தப் பிணம் தன் மகனல்ல என்று கூறியதுபோலவே இப்போதும் தெளிவு படுத்திக்கொண்டு வருவதுடன், போலீசுக்குப் புதிய தகவல் ஒன்றையும் தந்திருக்கிறார் :

> "பிணமாக மிதந்தவரை என் மகன் என்று ஒப்புக் கொள்ளுமாறு, சில அரசியல்வாதிகள் தொந்தரவு செய்கிறார்கள்; எனவே, எனக்குத் தகுந்த பாதுகாப்பை அதிகாரிகள் கொடுக்க வேண்டும்"

என்பதுதான் அந்தப் புதிய தகவல்.

இதன் மூலம், உதயகுமார் என்பவர் வேறு; கண்டெடுக்கப்பட்ட பிணம் வேறு என்று பிரித்தறியப் போதுமான காரணம் ஏற்பட்டு விடுகிறது.

அதுமட்டுமல்லாமல், யாரோ சிலர், பெருமாள்சாமி என்பவரை, நிர்ப்பந்தித்து, அந்தப் பிணம், தன் மகன்தான் என்று கூறச்செய்து, அதன் மூலம் ஏதோ சில அரசியல் விவகாரங்களை உண்டாக்கவும் முயன்று வருகிறார்கள் என்றும் பெறப்படுகிறது.

அதுபோலவே, காணாமற் போயிருப்பவர் உயிருடன் இருந்தால், அல்லது வெளி உலகத் தொடர்புடன் இருப்பவராயிருந்தால், நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வளவு பெரிய அமளியைக் கண்டு, கண்மூடிக் கொண்டிருப்பார் என்பதையும் நம்ப முடியவில்லை.

பெருமாள்சாமி என்பவரது கூற்றுப்படி, அவர் நிர்ப்பந்திக்கப்படுகிறார் என்றால், அந்தப் பிணம் அவருடைய மகன் அல்ல என்பது உண்மை நிலையாகி விடுகிறது.

இந் நிலையில், உதயகுமார் என்பவரைப்பற்றி புதிய ஐயம் ஒன்று, ஆழ்ந்து சிந்திப்பவர்களுக்கு ஏற்படக்கூடும்.

உதயகுமார் என்பவர்—ஒன்று உண்மையிலேயே கொல்லப்பட்டிருக்க வேண்டும்; அல்லது புறஉலகின் தொடர்பிலிருந்து துண்டித்து மறைக்கப்பட்டிருக்க வேண்டும்.

நம்முடைய ஐயம், பெருமாள்சாமி என்பவரை யார் யார், அந்தப் பிணம் உதயகுமாருடையதுதான் என்று கூறச்சொல்லி நிர்ப்பந்திக்கிறார்களோ, அவர்களாலேயே உதயகுமார் மறைக்கப்பட்டிருக்கக் கூடுமோ என்பதுதான்.

அத்தகைய கிரிமினல் குற்றத்துக்கு 'நவசக்தி' என்ற நாளேடும் துணையாக இருக்கிறதோ என்ற ஐயம் பொதுவாக பொதுமக்களுக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். ஃ

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவகையில் அருவருப்பான தன்மை. ஆனால் உண்மையாக இருந்தால், அதுகூட மன்னிக்கத் தக்கது. தன்னை அறிவாளி என்று நினைத்துக்கொள்கிறவன், பிறரை முட்டாள் என்று நினைத்துத்தான் தீரவேண்டுமா? அப்படி நினைப்பதே படித்தவர்களுக்கும் பட்டம் பெற்றவர்களுக்கும் அழகல்ல.

பட்டம் பெற்ற நவீன உயர்சாதி அகங்காரம் தான் அண்ணாமலைப் பல்கலைக்கழக குழப்பங்களுக்கு மூலகாரணம்.

பட்டம் பெறாத பலர் உலகின் பல அரங்கங்களில் ஆற்றியுள்ள பணிகளை நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தால், இந்தக் கூச்சல் எழுந்திராது.

ஸ்டாலினும், குருஷ்சாவும் பட்டம் பெறாத தொழிலாளிகள். அவர்கள் அறிவுத் திறனை, சேவையைக் குப்பையில் போட்டுவிட முடியுமா?

தமிழகத்தில் ஜீவா, ம.பொ. சி. போன்றவர்கள் பட்டம் பெறாமல் இலக்கிய, அரசியல் விற்பன்னர்களாகத் திகழவில்லையா?

இன்றைக்குக்கூட தொழிலாளர் பலர் அரசியல், பொருளாதார மேதைகளாக இருக்கிறார்கள்.

இந்த உயர்வு நவிற்சி பல வடிவங்களில் நாட்டின் முன்னேற்றத்தைப் பாதித்து வருகிறது.

அரிஜன அர்ச்சகர்!

கேரளத்தில் வேதபாடங்களை முறையாகக் கற்றுத் தேறிய மூவரைக் கேரள அரசு ஒரு கோயிலுக்கு அர்ச்சகர்களாக நியமித்தது. இதைக் கேள்விப்பட்டவுடன் உயர்சாதி அர்ச்சகர் கோயிலை இழுத்துப் பூட்டிவிட்டு, சாவிகளை ஆற்றில் எறிந்துவிட்டுப் போய்விட்டார்.

அவர்கள் பக்தர்கள் அல்ல என்பதால் அல்ல, அவர்களுக்கு வேதம் தெரியாது என்பதாலும் அல்ல.

அவர்கள் சேரியில் பிறந்தவர்கள் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் கதவு தாழிடப்பட்டது. நந்தனைக் கொளுத்தியவர்கள். இவர்களுக்குக் கதவை மட்டும் சாத்தி இருக்கிறார்கள்!

அம்பேத்கர் பட்டபாடு!

இதேபோல அம்பேத்கர் போபாலில் உயர் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார். அவரிடம் வேலை பார்த்த டவாலி போட்ட சேவகன் உயர்சாதியைச் சேர்ந்தவன். எனவே, அவருக்குத் தண்ணீர் தர மாட்டானும். அவர் தொட்ட காகிதத்தைக் குச்சியால் குத்தி எடுத்துக் கொண்டுதான் போவானும்!

அம்பேத்கர் அழுதுகொண்டே வேலையை விட்டு வெளியேறினார் அதன் பின்னர் அவர் வக்கீலானபோது, சக வக்கீல்கள் அவரை மரபுப்படி 'சகோதரர்' ('My Learned brother') என்று அழைக்க மறுத்தார்கள்.

இதே சமுதாய நோய்தான். வளர்ந்து, படித்தவர்கள் மத்தியில் ஒரு நவீன சாதியை உண்டு பண்ணியிருக்கிறது. இதற்கு இரையான மாணவர்கள் சிலர்தான் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஒப்பீடு சரியா?

இந்தக் கட்டுரையில் பல பெரியார்களின் பெயரைச் சுட்டிக்காட்டி சம்பவங்களை விளக்கியதால், அவர்களும் கருணாநிதியும் ஒன்றா? என்று சிலர் கேட்கத் துடிப்பார்கள்.

யாரையும் யாருடனும் ஒப்பிடுவது சரியல்ல, ஆனால், அனுபவங்களிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். சில கோட்பாடுகள் பெரியவர்கள். சிறியவர்களுக் கேற்ப நெளியத் தேவையில்லை. நெறி எல்லோர்க்கும் பொது.

இந்த நோக்குடன் அண்ணாமலைப் பல்கலைக் கழக நிகழ்ச்சிகளைப் பார்த்தால், சில நிகழ்ச்சிகளின் காரணங்கள் புரியும்,

இப்பொழுதுதான் கண் தெரிந்ததா?

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், கலைஞர் கருணாநிதி அவர்களின் எழுத்தாற்றல், பேச்சுத் திறன், அரசியல் சாதனைகளைப் பாராட்டிப் பட்டம் வழங்குவதாகக் கூறுகிறது.

கலைஞர் தீப்பொறி பறக்க எழுதிக்கொண்டிருந்த காலத்தில் அதை அங்கீகரித்துப் பட்டம் வழங்கியிருந்தால், பேச்சுக்கு இடம் இராது.

அவர் முதல்வரான பிறகு, இரண்டாம் தடவையாகவும் உறுதியாக வந்த பிறகு, மேலும் நான்காண்டுக் காலம் நீடிப்பார் எனத் தெரிந்த பிறகுதான் அண்ணாமலையார் விழி திறந்து பார்த்திருக்கிறார். இது பல்கலைக் கழகத்தின் தன்மையைக் காட்டுகிறது. அது பட்டம் பெறப் போனவரையும் பாதித்து விட்டது.

பல்கலைக் கழகத்தின் காலங் கடந்த ஞானோதயமும், படித்த பட்டதாரிகளின் 'படித்த சாதி' வெறியும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக வளர்ந்தும், வளர்க்கப் பட்டும் வரும் ஒரு குறிப்பிட்ட சாதி வெறிப் போக்கும் பட்டமளிப்பு விழாவில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வழங்கியுள்ள பட்டத்தை விட மக்கள், கலைஞர் கருணாநிதிக்குக் கொடுத்துள்ள முதல்வர் என்ற இடமும், பட்டமும் பெரிது; புகழ்மிக்கது. எனவே. அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியதில் தவறுஇல்லை. நன்றி: 'ஜனசக்தி'

இறவாத புது நூல்கள்

பாவேந்தர் பாரதிதாசன் எழுதியவை:—

குறிஞ்சித் திட்டு	... ரூ.	6	00
பாண்டியன் பரிசு	...	3	50
பிசிராந்தையார்	...	2	50
தமிழியக்கம்	...	1	00
பாரதிதாசன் கவிதைகள்—I	...	3	50
இசையமுது I, II	...	2	00

கவிஞர் கண்ணதாசன் எழுதியவை:—

குட்டிக் கதைகள்	...	1	25
மாங்கனி (புதிய பதிப்பு)	...	2	00
புஷ்ப மாலிகா	...	2	00
திரை இசைப் பாடல்கள்	...	5	00

அறிஞர் கி. ஆ. பெ. எழுதியவை:—

தமிழின் சிறப்பு	...	2	50
தமிழ்ச் செல்வம் (நாடகம்)	...	2	50
வள்ளுவரும் குறளும்	...	1	25
திருக்குறள் கட்டுரைகள்	...	1	25

விலையுடன் அஞ்சல் செலவு 20 காசு சேர்த்துக்கொள்க.

தேவைக்கு M. O. அனுப்புக.

திருவள்ளுவர் பொத்தக இல்லம்,

இன்தமிழ்நூல் விற்பனைக் கழகம்,

கடத்தூர் அஞ்சல். தருமபுரி மாவட்டம்.

சோழமாதேவி

ராஜிமணாளன்

[20]

போய்விட்டான் பூபதி!

அந்தரங்க ஆலோசனை அவையின் தனியறைப் பக்கமாக சோழ தேவியை அழைத்து வந்து கொண்டிருந்த மன்னர், தேவியைப் பார்த்து "தேவி, பூபதி மிகவும் ஆபத்தான நிலைக்கு ஆட்பட்டுவிட்டானும்; அவனைத் தமிழகத்துக்கு அழைத்துச்செல்ல வேண்டுமென மருத்துவர் சொல்கிறாராம். பூபதியின் கூடவே, தளபதியும் செல்ல வேண்டும்என்று விரும்புகிறாராம்; ஒரு நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறோம் நாம்" என்று கூறினார்.

முதல்நாள் இரவு, தான், தனது மனோ நிலைகள் காரணமாகத் தமிழ்நாடு சென்று தங்கி வருவது குறித்துச் சிந்தித்துக் கொண்டிருந்ததும், நாட்டின் இப்போதைய அரசியல் சூழ்நிலையில் தான் அரசரை விட்டு தனித்துச் செல்வது என்பது முறையாகாது என்று அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டதும் சோழ தேவியின் இதயத்தில் மின்னிச் சிதறியது. அதனை யொட்டி இரவு நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் மனத்திரையில் காட்சியாகி நிற்கத் தொடங்கின.

"என்ன தேவி, அமைதியாகிவிட்டாய்! ஆமத்தியரைச் சுற்றியே மனத்தை ஓடவிட்டிருக்கிறாயா? அல்லது தமிழகம் என்றதும், பழைய நினைவுகள்பற்றிக் கொண்டனவா?" என்று கேட்டுவிட்டு, "தேவி, பூபதி தமிழகம் செல்லத்தான் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டால், உடன் நீயும் செல்ல வேண்டியிருக்கும்" என்று சொல்லி, தேவியின் முகத்தின்மீது பார்வையை ஓடவிட்டார்.

இப்போதைய சூழ் நிலையில் தன்னைப் பிரிந்திருக்க அரசரால் முடியாது என்ற தன் கணிப்பு இத்தனைச் சீக்கிரம் பொய்யானதாகிவிடும் என்பதை சோழதேவி எண்ணிப் பார்க்கவே இல்லை.

இரவு நிகழ்ச்சியின்போது, தன்மீது நாட்டுத் துரோகக் குற்றம் சுமத்தப்பட்டதும், ஆனாலும் அந்தக் குற்றச் சாட்டை வலியுறுத்த விரும்பவில்லை யென்று அரசர் கூறியதும், இப்போது அதற்கு மாறாக, தானும் தமிழ்நாட்டுக்குச் செல்லவேண்டியிருக்கும் என்று மன்னர் கூறுகிறாரே, இரவுச் சம்பவங்களுடன் தொடர்புடையதுதானோ இதுவும் என்று எண்ணினார். அதன் வழியிலேயே சிந்திக்கவும் தொடங்கினார்.

"என்ன தேவி, எதுவுமே பேசாமல் வருகிறாய்! என்னுடன் பேச உனக்கு விருப்பமில்லையா?" என்று கேட்டார், பரிதாபம் கலந்த குரலில். அரசரின் அந்தக் கேள்வி, தேவியை ஒருகணம் அதிரவைத்துவிட்டது. கனவுலகிலிருந்து வெளிப்பட்டவரைப் போல, "ஊம், என்ன சொன்னீர்கள் பிரபு?" என்று கேட்டார்.

இதுவரையில், தான் கூறிவந்தவைகள் எதனையுமே தேவி, செவிமடுக்கவில்லை என்றும், அவர் ஏதோ புறச் சிந்தனைகளில் தன்னைப் புதைத்துக்கொண்டிருக்கிறார் என்றும், அதனாலேயே, தன்னுடன் பேச விரும்பவில்லையா? என்ற தன் வினாவைக்கூட சரியாகக் கேட்டுக்கொள்ளவில்லை என்றும் எண்ணிக் கொண்டார் மன்னர். "என்னுடன் பேச உனக்கு விருப்பமில்லையா என்று கேட்டேன் தேவி!" என்றார் மறுபடியும்!

அதற்குள் அந்தரங்க அவையின் முகப்பைத் தாண்டிவிட்டார்கள் இருவரும். தங்களது வருகையைக் கண்டு தளபதியும், மருத்துவரும் எதிர்கொண்டழைக்க வருவதனைக் கண்டனர் இருவரும். மன்னரின் அந்த வினாவுக்கு உடனடியாகப் பதில் சொல்லாவிட்டால், தனது இதயம் வெடித்துச் சிதறிவிடக் கூடும் என்று அஞ்சினார் சோழதேவி. எத்தனைப் பெரிய கேள்வியை எவ்வளவு இலேசாகக் கேட்டுவிட்டார் மன்னர்? எத்தகைய நெருக்கடியான நேரத்தில் வினாவைக் கேட்டுவிட்டு, தளபதியைச் சந்திக்க வந்துவிட்டார்? தளபதி, மருத்துவர் இவர்களது முன்னிலையில் தனது பதிலைச் சொல்லவும் முடியாது. அவர்களது அலுவல் முடிந்து, மன்னர் தனிமைப்படும் வரையில் தன்னால் அந்த வினாவுக்கான விடையைச் சுமந்துகொண்டிருக்கவும் முடியாது. பாவம், சோழதேவி!

மன்னருக்கும், தளபதிக்குமிடையே உரையாடல் நடக்கும் சந்தர்ப்பத்தில், சமயம் பார்த்துத் தனது பதிலை, நாசுக்காக நவின்று விடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே, தான் தமிழ்நாடு செல்லவேண்டும் என்று தீர்மானமாகிவிட்டால், நிலைமை முற்றிலும் மாறுபாடானதாகி விடக்கூடுமே என்ற புதிய அச்சம் ஒன்றும் பற்றிக்கொண்டது. அலையிடைப்பட்ட துரும்பு என்ற எடுத்துக்காட்டு, இப்போதைய அவரது மனோநிலைக்குப் பொருந்துமோ என்னவோ!

"பூபதி, இப்போது எப்படி இருக்கிறான் மருத்துவரே!" என்று கேட்டுக்கொண்டே இருக்கையில் அமர்ந்தார் அரசர். அரசியும் அவர் அருகே அமர்ந்து கொண்டார். தளபதி தியாகராயர், மருத்துவரை முந்திக்கொண்டு தானே பதில் சொல்லிவிடத் துடித்

தார். என்ருலும் மருத்துவர், மன்னரின் விஞவுக்கு இடையீடு அற்ற நிலையில் "மிகவும் ஆபத்தான நிலை தான் அரசே! ஜன்னி கண்டு விட்டது. வாய்ப் பிதற்றிக் கொண்டிருக்கிருன். என்னுலான எல்லா முயற்சிகளும் மேற்கொண்டு விட்டேன். பூபதியைத் தமிழ் நாட்டுக்கு அனுப்பி, முற்றிலும் ஒரு புதிய சூழ்நிலையைத் தோற்றுவித்தால், ஒருவேளை குண மாகக்கூடும்" என்று பதில் தந்தார்.

அவரைத் தொடர்ந்து தியாகராயரும், "மருத்து வரின் இந்த யோசனையை நான் வரவேற்கிறேன் அரசே!" என்ருர். "நல்லது! எப்போது அனுப்புவ தாக உத்தேசிக்கிறீர்கள்?" என்ருர் மன்னர். தியாக ராயர், "அரசரது அனுமதி கிடைத்ததும், ஆயத்தங் கள் செய்யவேண்டியதுதான்" என்ருர்.

"பூபதியின்கூட, யாரை அனுப்பப் போகிறீர்கள் தளபதியாரே"

"நானே சென்று வரலாம் என்று நினைக் கிறேன்!"

"அப்படியா!"

"அதுதான் சரி பிரபு! பூபதியை உயிராகக் கொண்டிருக்கும் தளபதியார், உயிரை மட்டும் பிரித்து அனுப்பிவிட்டு, வெறும் கூடாக இருந்து கொண்டிருக்க முடியுமா?"

—என்று குறுக்கிட்டுக் கூறினுர் சோழதேவி. தான், மன்னரைத் தனியாக விட்டுவிட்டுத் தமிழ் நாடு சென்று தனித்திருக்க முடியாது என்று சொல்லி விட்டதாக அவர் நினைத்துக்கொண்டார்.

"தியாகராயரே! மனு மன்னர் அடிக்கடி கூறு வார் என்று நான்கூட நம்மவரிடையே அடிக்கடி ஒரு கருத்தை எடுத்துக் காட்டுவேனே, நினைவிருக் கிறதா?" என்று மன்னர் கேட்டுவிட்டு தேவியின் பக்கம் திரும்பி, "உனக்காவது நினைவில் நிற்கிறதா தேவி?" என்ருர்.

மன்னரது இந்தக் கேள்விக்கான விடை, தள பதிக்கு மட்டுமல்ல, தனக்கும் தான் என்பதைப் புரிந்துகொண்ட தேவி "நன்ருக நினைவிருக்கிறது பிரபு! அரசாங்கப் பொறுப்புக்கு வரும்போது, பந்த பாசங்களை யெல்லாம் கழற்றி வைத்துவிட்டு வர வேண்டும்! என்பீர்கள்" என்ருர்.

"ஆமாம்" என்று வாய்விட்டுக் கூறிவிட்டு தள பதியின் பக்கம் திரும்பி, "தளபதியாரே நீங்களும் போவதாக முடிவு செய்து விட்டீர்களா?" என்ருர்.

"மன்னரது அனுமதி கிடைத்தால்தான் அரசே, நானும் போவேன்! பூபதியின் மீது நான் என் உயி ரையே வைத்திருக்கிறேன் என்பது உண்மைதான். ஆனுல் நான், இப்போதைய ஈழநாட்டின் பொது வான நிலைமைகளைப்பற்றியும், அதிகமாகவே அறிந்து வைத்திருக்கிறேன்" என்று கூறிவிட்டு, தலையைத் தாழ்த்திக்கொண்டு, தரையில் விரிக்கப்பட்டிருந்த இரத்தினக் கம்பளத்திலே காணப்பட்ட அழகு வேலை களின்மீது பார்வையை மிதக்கவிட்டார்.

தளபதியின் மீது பதித்திருந்த பார்வையை விலக்கி "அழகுகளைக் கண்டு ஆனந்திக்க மட்டும், கண்கள் எத்தகைய கட்டுப்பாடுகள்பற்றியும் சட்டை செய்வதில்லை. நேரம், காலம், சந்தர்ப்பச் சூழ்நிலைகள், மனுேநிலைகள் இவைகள் எல்லாம்கூட, அழகு ரசனை யின் முன்பு துரும்பாகி விடுகின்றதில்லையா தளபதி யாரே" என்று கேட்டுவிட்டு மன்னர், மருத்துவரின் பக்கம் திரும்பி, "மருத்துரே! உங்களுக்குக் கடல் பிரயாண அனுபவம் இருக்கிறதா?" என்ருர்.

பூபதியின்கூட, தன்னைத்தான் மன்னர் அனுப்ப விரும்புகிருர் என்று எண்ணிக்கொண்ட மருத்துவர், "பல ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் நாட்டிலிருந்து, நாவாய் மூலம்தான் அரசே நான், இலங்கைக்கு வந்தேன்!" என்ருர் பணிவுடன்.

"அப்போதைய அந்தப் பயணத்தின் போது உமக்கு ஏதேனும் அனுபவம் ஏற்பட்டதா?"

"எனக்கேதும் இல்லை அரசே! இலேசாகக் குமட் டலும் வாந்தியும் ஒருநாள் வரையில் இருந்தது. அதைத் தவிர வேறெந்த அனுபவமும் எனக்கு ஏற்பட்டதில்லை. ஆனுல் என் கூடவே வந்த இன் ஞெரு மருத்துவருக்குக் காய்ச்சல் வந்து விட்டது அதனைக் கடற்காய்ச்சல் என்ருர் அவர். கரை இறங்கி பத்து நாள் வரையில் அவர் படாத பாடுபட்டார் என்பது என் நினைவுக்கு வருகிறது."

"அதாவது, கடற் பயணத்தின்போது காய்ச்சல் வரக்கூடும்; அது ஆபத்தானதாகவும் ஆகக்கூடும் என்று கூறுகிறீர்கள்! அப்படித்தானே மருத்துவரே!"

'இலட்சியமனைவி'

கவிஞர் மணிவேந்தன்

இதயம் நாடும் வல்லியே
எனது காதல் அல்லியே
உதய மாகும் ஞாயிறே
ஒன்றி வாழும் அன்றிலே!
வீட்டில் இன்பம் தங்கிட
விழிப்பு ணர்ச்சி பொங்கிட
வாட்டம் இன்றி வாழ்ந்திட
வழிவ குக்கும் வனிதையே!
காலைச் சேவல் கூவிட
கண்வி ழிப்பாய் அன்னமே
வேலை யெல்லாம் விடியுமுன்
விரைந்து செய்வாய் அன்பொடு!
சிந்தை நொந்தே இருப்பினும்
சினந்து நானும் பேசினும்
சொந்த மோடு கொஞ்சியே
சொக்க வைப்பாய் என்னையே!
துன்ப உணர்ச்சி இன்றியே
துயர இருளைப் போக்கிட
அன்புச் சுடரை ஏற்றிடும்
அருமை மனைவி நீயேதான்!
இல்லம் தழைத்தல் போலவே
இதயம் தழைக்க வாழ்ந்துமே
வெல்லத் தமிழின் இனிமையை
விரும்பும் துணைவி நீயேதான்!
உண்மை அன்பு காட்டியே
உணர்ச்சித் தேனை ஊட்டியே
பெண்மை என்ற பெயருக்கே
பெருமை தேடித் தருகின்ருய்!
வீம்பு பேசா நல்மனம்
விரும்பச் செய்யும் நற்குணம்
மாண்பு நிறைந்த "இலட்சிய
மனைவி" நீதான் மங்கையே!

"ஆமாம் அரசே!

கடற்பயணம் என்பது எல்லாருக்கும் ஒத்துக் கொள்ளாது என்கிறீர்கள் இல்லையா நீங்கள்" என்ற போது தளபதி குறுக்கிட்டு, "பூபதியும் கூட கப்பல் மூலமாகத்தான் அரசே இங்கு வந்தான்! தமிழகத்தி லிருந்து இங்கு வந்துள்ள அனைவருமேகூட அப்படித் தான் வந்திருக்கிறார்கள். எனது அனுபவம் கூட வேடிக்கை நிறைந்ததுதான்!! என்றார்.

"வேடிக்கை பேசவில்லை தளபதியாரே! உமது அனுபவங்களை, முத்துமுடியார் சொல்லிச் சொல்லி சிரிப்பதைக் கேட்டிருக்கிறேன் நான்! ஆனல், பூபதி யின் இப்போதைய நிலையில், அவன் கடல் பயணம் செய்ய முடியும்?" என்று யாராவது யோசித்தீர் களா?" என்று கேட்டு விட்டு ஒருகணம் அமைதி யானர்.

மருத்துவர்கூட அதுபற்றிச் சிந்தித்துப் பார்க்க வில்லை. ஜன்னி கண்டிருக்கும் ஒருவனல் கடற் பயணம் மேற்கொள்ள முடியுமா? உயிருடன் அவன் அக்கரை சேரமுடியுமா என்று யாருமேநினைக்கவில்லை.

"மன்னிக்கவேண்டும் அரசே! நாங்கள் நினைத்தே பார்க்க முடியவில்லை. எங்கள்பரபரப்பு அத்தகையதா யிருந்தது," என்றார் மருத்துவர்.

"பூபதி போகக்கூடாது என்று நான் தடுப்பதா கத் தளபதியார் நினைக்கக்கூடாது. போதிய மருத்துவ வசதியுடன் பூபதி செல்லலாம். உடன் மருத்துவரும் செல்லவேண்டும். கடற்காய்ச்சல் பற்றுதவாறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதும் எளிதானதுதான்! மருத்துவர் தயாராக இருக்கிறாரா? என்றதும், மருத் துவருக்குத் தூக்கிவாரிப்போட்டது. இந்த முதுமைக்

காலத்தில்தான் கடற் பயணம் மேற்கொண்டு தமிழ் நாடு போய்விட்டு, நல்ல முறையில் மீண்டு வர முடி யுமா என்பதில் அவருக்குச் சந்தேகம் பற்றிக்கொண் டது. தானும் கூடவே போகக்கூடாது என்று முடிவு மேற்கொண்டவர் போல, "அரசே! சிகிச்சை முறை களை தளபதியார் அவர்களுக்கு நன்ருக விளக்கி, எந் தெந்த நேரத்தில் எந்தெந்த மூலிகையின் சாற்றைக் கொடுக்கவேண்டும்; எந்தெந்த சந்தர்ப்பங்களில் எப் படி எப்படி எங்கெங்கு கணப்புச் சூடு கொடுக்க வேண்டும் என்பதை எல்லாம் விளக்கிவிட்டால் சரி யாகிவிடும்!" என்றார்.

மன்னர் மெள்ளச் சிரித்துவிட்டு, "உயிரின்மீது உங்களுக்கிருக்கும் ஆசை அப்படியிருக்கும்போது, பூபதியை நடுக் கடலில் கொண்டுபோய் பலிகொடுக்க நீங்கள் நினைக்கிறீர்கள், நாட்டின் நிலையில், தளபதி யாரும் செல்ல முடியாது; உயிரின் ஆசைமீது மருத் துவரும் செல்ல விரும்பவில்லை. அப்படியானல் என்ன செய்ய முடியும் தளபதியாரே!" என்று கேட்டு சோழ தேவியின் பக்கம் திரும்பினர்.

தான்தான் பூபதியுடன் தமிழ்நாடு செல்லவேண் டியிருக்கும் என்பதை மன்னர் சொல்லாமற் சொல் கிறார் என்று யூகித்துக்கொண்ட தேவி "யாரேனும் ஒருவரை அனுப்பி, தமிழகத்திலிருந்து நல்லதொரு மருத்துவரை இங்கு அழைத்துவர ஏற்பாடு செய்ய லாமே பிரபு" என்றார்.

"தேவி, நீ நமது மருத்துவரின், மருத்துவத் திற மையில் குறை காண்கிருய் என்றல்லவா அதற்குப் பொருளாகும். மருத்துவர் சொல்வது பூபதிக்கு இட மாற்றம் தேவை என்பதாகும்." என்று கூறிவிட்டு சற்றே அமைதியானர்.

தளபதி தியாகராயரால் அந்த உரையாடல்களை யெல்லாம் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருக்க முடியவில்லை என்பதை, அவனது முகத் தோற்றங்கள் பல்வேறு வடிவெடுத்துக் கொண்டிருந்ததிலிருந்து யூகித்துக்கொண்டார் மன்னர்.

"தளபதியாரே! உங்களுக்கு என் தேவியின்மீது நம்பிக்கை இருக்கிறதா?" என்ற வினவை யாரும் எதிர்பாராமல் விடுத்துவிட்டு தேவியின்பக்கம்திரும்பி "பூபதியுடன் நீதான் தேவி தமிழகம் செல்லப்போகி ருய்! தயாராகிக்கொள்" என்று கூறிவிட்டு, தளபதி யிடம், "ஆயத்தங்களைச் செய்யுங்கள்" என்று பணித்துவிட்டு மருத்துவரை நோக்கி, "சிகிச்சை முறைகளை தேவியிடம் விளக்குங்கள்" என்று கூறி விட்டு, தேவியின் பதிலை எதிர்பாராமல், எழுந்துவிட் டார் மன்னர்.

தேவியார், மன்னரது முகத்தை ஏறிட்டுப் பார்க்கும்போது, அதிலே ஒருவிதமான கவலை ரேகை கள் படர்ந்திருக்கக் கண்டார். "வாருங்கள் தளபதி யாரே. பூபதியைப் பார்த்து வருவோம்!" என்று கூறிவிட்டு அனைவருக்கும் முன்னதாக அவரே நடக் கத் தொடங்கினர்.

அரசரைத்தொடர்ந்து அரசியாரும், அவர்களைத் தொடர்ந்து மற்ற இருவரும் மௌனமாகநடந்தனர். ஒவ்வொருவரது இதயத்திலும் ஒவ்வொரு விதமான எண்ணங்கள் தோன்றித் தோன்றி பாடாய்ப் படுத் தியது.

தேவியார், தனக்குத் தண்டனை வழங்குகிறார் அரசர் என்று கருதிக்கொண்டார். தளபதியோ, தன் னைப் பழி வாங்குகிறார் என்று எண்ணிக்கொண்டு

தடுமாறினார். உள்ளப் போராட்டம் வெளிப்படவே இல்லை. எனவே அமைதி, அரசரைத் தொடர்ந்து போய்க்கொண்டிருந்தது.

எள்ளாளப் பேரரசர், ஏதோ ஒரு வகையான முடிவுக்கு வந்து, அந்த முடிவைச் செயல்படுத்தும் நோக்கத்தில் இயங்கும் ஒருவகையான அமைதியில் நடந்துகொண்டிருந்தார். அவரைப் போலவே, மருத்துவரது இதயத்திலும் ஒருவகையான அமைதி குடிகொண்டிருந்தது.

ஆனால், சோழதேவியும், தளபதியும் குழம்பிய உள்ளத்தோடு ஒன்றுக்கொன்று பொருந்தி வராத பல காரணங்களைக் கற்பித்துக்கொண்டு, எதை எதைப்பற்றியோ எண்ணிக் குமைந்தார்கள்.

தளபதி தியாகராயர், நாட்டின் பொதுவான சூழ்நிலையில், தான் தமிழ்நாடு செல்ல விரும்புவதாகக் கூறியதே தவறு என்று எண்ணினார். அத்தவற்றினை வெளிப்படையாகக் கண்டிக்காமல், சோழதேவியினை, பூபதிக்குத் துணையாக அனுப்பப்போவதாகக்கூறி, தன் இதயத்தில் பரபரப்பை மூட்டிவிட்டார் என்றும் நினைத்துக்கொண்டார். பூபதி, தன் உயிருக்கு மன்றாடிக்கொண்டிருக்கிறான். காய்ச்சல், அனலாகக் கொதிக்கிறது. வாய் உளறிக் கொட்டும் அளவு ஜன்னியின் வேகம் மிகுந்திருக்கிறது. தன் நினைவு இழந்துவிட்டானே என்று மருத்துவரே ஐயுறுகிறார். இந்நிலையில், அவனை கடல் பயணம் செய்வித்து, உயிருடன் தமிழ்நாட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க முடியும் என்று எப்படி உறுதியாகச் சொல்ல முடியும்? இதுபற்றி மன்னரே மறைமுகமாகக் குறிப்பிட்டு விட்டார். பூபதியை, யாழ் துறைமுகம் கொண்டு சென்று, அங்கிருந்து குறுக்குவழியாக கோடிக்கரை துறைமுகத்துக்கு வருவதானால்கூட, காற்று சாதகமாக இருந்தால் குறைந்தது நான்கு நாட்களாவது வேண்டும். கோடிக்கரையிலிருந்து, ஆரூருக்குக் குதிரையில் கொண்டுபோக முடியாது. பல்லக்கில் கொண்டு போவதானால், எப்படியும் இரு நாட்கள் தேவைப்படும். இந்த ஆறு நாட்கள் வரையில், பூபதியின் நிலை என்னவாகும்? கோடிக்கரை வழியை வேண்டாமென்று, நாகை வழி வருவதானாலும் இந்த அளவு அவகாசம் குறையப்போவதில்லை. எனவே, பூபதியை உயிருடன் தமிழ்நாடு கொண்டுபோய்ச் சேர்க்க முடியும் என்று எதிர்பார்க்கவே முடியாது! இப்படியாக தளபதியாரின் இதயத்தில் எண்ண ஓட்டங்கள் ஓடத் தொடங்கியதும், பூபதியைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டு செல்லத் தேவையில்லை என்று, அவரால் ஒரு முடிவுக்கு வர முடிந்தது. அந்தப் பயணம் தடுக்கப்பட்டால்தான், தன்னைப் பழிவாங்க நினைக்கும் முறையில், சோழ தேவியைத் தமிழ் நாட்டுக்கு அனுப்புவதையும் தடுக்க முடியும்! மன்னர் குறிப்பிட்டதுபோல், பூபதியின் இன்னுயிரை, கடலுக்குப் பலியாக்குவதைவிட — நடுக்கடலிலே பிரிந்துவிடக் கூடிய அந்த உயிர், இந்த மண்ணிலேயே பிரியட்டும்! என் கண் முன்னாலேயே மறையட்டும்! என்று தீர்மானித்துக் கொண்டார் தியாகராயர்.

தன் தீர்மானத்தை மன்னரிடம் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணியபோது ஒருவிதமான தயக்கம் தியாகராயரைப்பற்றிக்கொண்டது. மன்னர் ஒன்றின்மீது ஒரு முடிவெடுத்து விட்டார் என்றால், அதனை, எந்தக் காரணத்துக்காகவும், யாருடைய வேண்டுகோள்களுக்காகவும் மாற்றிக்கொள்ள முன்வரமாட்டார், அந்த இயல்பை, பெரிதும் போற்றுவதுடன் ஒருவர், பொது நன்மை கருதி எடுக்கும் எந்தவொரு முடிவுக்கும், மற்றவர்களது தலையீட்டினால், முடிவை மாற்றிக்கொள்ளக் கூடாது என்றும், தவிர்க்கமுடியாத தலையீடுகள் ஏற்பட்டால்கூட, முடிவு மாறக்கூடாது என்றும், அத்தகைய பொதுப் பண்பு அரசாங்கத்திலிருப்பவர்களுக்கு தலையாயதாக இருக்கவேண்டும் என்றும் சந்தர்ப்பம் கிடைக்கிற வேளைகளில் எல்லாம் எடுத்துச் சொல்லத் தவறமாட்டார். அப்படிப்பட்டவரிடம், தன் பொருட்டு, தன் விழைவையொட்டி பூபதியைத் தமிழ்நாடு அனுப்ப முடிவெடுத்துவிட்ட பிறகு, அது தேவையில்லை என்று எப்படி எடுத்துக் கூறமுடியும்?

முருகபூபதியினது உயிரின் துடிப்பைவிட, தளபதியின், உள்ளத் துடிப்பு பரிதாபத்துக்குரியதாக இருந்தது.

அதே நேரத்தில், சோழதேவியோ தன் இதயத் துடிப்பை வெளிக்காட்ட முடியாமல் தவித்தார். ரோகணரடாவுக்குத் தான் ஓலையனுப்பியதைக் குற்றம் என்று கூறிய மன்னர், அந்தக் குற்றத்துக்காகத் தன்னை தமிழ்நாடு அனுப்பப் போவதாகக் கூறியிருந்தால்கூட குற்றத்திற்குரிய தண்டனையென்று ஏற்றுக்கொண்டு விடலாம்; ஆனால், பூபதிக்குத் துணையாகத் தான் செல்லவேண்டும் என்று ஏன் பணித்தார்? தளபதியிடம், என் தேவியின்மீது உனக்கு நம்பிக்கை இருக்கிறதல்லவா என்று கேட்டுவிட்டு, தளபதியின் பதிலைக்கூட எதிர்பாராமல், என் விருப்பத்தையும் கேளாமல், தமிழ்நாடு செல்லவேண்டும் என்று கட்டளை அல்லவா பிறப்பித்துவிட்டார்! கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல் குற்றமில்லை. அந்த அளவு குற்றத்தையா நான் செய்துவிட்டேன்? அது தான் போகட்டும்; என்னுடன் பேச உனக்கு விருப்பமில்லையா? என்று கேட்டார். என் பதிலைச் சொல்லுவதற்குமுன்பு, தளபதியும், மருத்துவரும் வந்துவிட்டனர். அவர்களது முன்னிலையில் சொல்லக்கூடிய பதிலா அது? உரையாடலின்போது, வாய்ப்பேற்படுத்திக் கொண்டு சொல்லிவிட நினைத்தேன். எதையோ சொன்னேன், உயிரைவிட்டு, உடல் பிரிந்திருக்குமா என்று! மன்னரை விட்டு என்னால் பிரிந்திருக்கமுடியாது என்று வாதிடுவதற்கு, அது பொருந்துவதாக இருக்கக் கூடும்! பேச விரும்பவில்லையா என்பதற்குச் சரியான பதிலாகுமா? ஏன் ஆகாது? பிரிந்திருக்கவே முடியாத தன்னால், பேசாது இருக்க மட்டும் முடியுமா? பேசாது இருப்பது என்பது வேறு; பிரிந்திருப்பது என்பது வேறு! உண்மைதான், அது சரியான பதிலாகாதுதான்! அதற்கும் சேர்த்துத்தான் அந்த தண்டனையை வழங்கிவிட்டாரோ! எப்படியும் இது தொடர்பாக மன்னரிடம் வாதித்தே தீரவேண்டும்! எப்படி? எப்போது?

குழம்பினார், சோழதேவி! குமைந்தார் தியாகராயர். இருவரது குழப்பமும் அவர்களது நடையின் வேகத்துக்குத் தடையானது மட்டுமல்ல, தள்ளாட்டத்தையும் உண்டாக்கிவிட்டது. அந்தத் தள்ளாட்டம், மன்னருக்கும், அவர்களுக்குமிடையேயான தூரத்தை அதிகப்படுத்திவிட்டது.

எதையோ எண்ணிக்கொண்டு, "என் தேவி..." என்று கேட்டுத் திரும்பியவர், பின்னால் தன் தேவி இல்லையென்பதையும் சற்றுத் தூரத்தில் தள்ளாட்டத்தோடு நடந்து வருவதையும் கண்டு, பதறிப்போய், வேகமாகத் திரும்பி வந்து, தேவியைத் தாங்

கிப் பிடித்துக்கொண்டார். தேவியின் அந்த நிலைக்கான காரணத்தைப் புரிந்துகொள்ளாமலா மன்னர் இருப்பார்? தேவியைத் தன்மீது சாய்த்துக்கொண்டபடியே, இகழ்ச்சிப் புன்னகை ஒன்றை உதிர்த்துவிட்டு, "இன்னும் எவ்வளவோ பெரிய அதிர்ச்சிகளையெல்லாம் தாங்கிக்கொள்ள வேண்டிய இதயத்தைக் கொண்டிருக்க வேண்டும் தேவி, நீ," என்று கூறினார்.

சற்றேக்குறைய, பூபதி கிடத்தப்பட்டிருந்த இடத்தை அவர்கள் அணுகி இருந்தார்கள். சோழ தேவியின் அந்த நிலையைக்கண்டு தளபதியும், மருத்துவரும்கூட ஒருகணம் திகைக்கத்தான் செய்தார்கள். அந்த விநாடியில், முருகபூபதியின் இரங்கத் தக்க நிலையைவிட, தேவியின் நிலை குறித்து எல்லாருக்குமே ஒரு கவலை பற்றிக்கொண்டது.

அரசியாரை, மெள்ள நடத்திக் கொண்டு போய், இருக்கையொன்றின் மீது, அமர்த்தினார் மன்னர். உடனேயே மருத்துவர், அவரது நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு, நாடித் துடிப்பும், இதயத் துடிப்பும் அளவுக்கு அதிகமாக இருப்பதாகவும் அவர் முழு ஓய்வு பெறவேண்டும் என்றும் எடுத்துச் சொல்லிவிட்டு, அவர், அந்தச் சூழ்நிலையில் கடற் பயணம் மேற்கொள்ளக் கூடாது என்பதையும், மன்னரிடம் எடுத்துரைத்தார் மருத்துவர்.

தனக்குச் சரியான சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதாகக் கருதிக் கொண்ட தியாகராயரும் ',அரசே! என்னை மன்னிக்க வேண்டுகிறேன்! இந்தக் கொடியவன், பூபதியைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்று கூறி இராவிட்டால். இப்படியெல்லாம் நேர்ந்திராது. அரசே! பூபதியை உயிருடன், ஊர்ச் சேர்க்கமுடியாதென்பதை நான்உணர்கிறேன், பயணத் திட்டத்தைக் கைவிட்டு விட, மன்னர் அவர்களது அனுமதியைக் கோருகிறேன்" என்று தன் எண்ணத்தையும் எடுத்து வைத்தார்.

அதற்குள் பணியாள் ஒருவன், இன்னொரு இருக்கையைக் கொண்டுவந்து தேவியாருக்கு அருகில் போட்டான். மன்னர் அதிலே அமர்ந்துகொண்டு, தேவியார் உட்பட அனைவரையும் பார்த்துவிட்டு, மறுபடியும் ஒரு நிகழ்ச்சிச் சிரிப்பைச் சிந்திவிட்டு, "தளபதியாரே! நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் மற்றவர்களது கருத்துக்கு மதிப்பளிக்கத் தவறியதில்லை. ஆனால்..." என்று கூறி ஒரு கணம் அமைதியானார்.

அமைதி ஆட்சி செலுத்திய அந்தக் குறுகிய நேரத்துக்குள், மன்னர் "ஆனால்..." என்று சொல்லி நிறுத்திவிட்டதைத் தொடர்ந்து, பூபதி தமிழ் நாட்டுக்குக் கொண்டு செல்லப்படத்தான் வேண்டும்; கூடவே, சோழதேவியாரும் செல்லத்தான் வேண்டும் என்று கூறப் போவதாக முடிவு செய்து விட்டனர். அதே நேரத்தில் மன்னரும் விட்ட இடத்திலிருந்து "...ஆனால், தளபதியாரே!" என்று தொடர்ந்தார். அந்தச் சொற்களின் ஒலி, மற்றவர்களது செவிப் பறையை எட்டுமுன், பணியாள் ஒருவன் பதறியடித்துக் கொண்டு "பூபதி போய்விட்டார் அரசே!" என்று கதறிக்கொண்டே ஓடிவந்தான்.

பணியாளிடமிருந்து வெளிப்பட்டுச் சிதறிய சொற்களைக் கோவையாகக் கேட்டாரோ, இல்லையோ தளபதியார்! அந்த இடத்தை விட்டு ஓடினார், பூபதி கிடத்தப்பட்டிருந்த இடத்தை நோக்கி, மருத்துவரத நிலை சங்கடமானதாக :இருந்தது. அதனைத் தீர்த்து வைப்பவர் போல மன்னர் "நீங்களுப் போகலாம்" என்று கூறிவிட்டு, தேவ யைத் கைத்தாங் லாக அழைத்து கொண்டு, மன்ன ரும் அந்த இடத்துக்குப் புறப்பட்டார்!



சுவைத்ததைச் சொல்கிறோம்

"காமவேள் நடனசாலையில் கற்பூரக் கடை" என் அறிஞர் அண்ணா அவர்களது புராண ஆராய்ச்சி கட்டுரை என்னை ஒரு புதிய உலகுக்குக் கொண்டுவந் விட்டது. அந்தக் கட்டுரையைப் படிக்கும் வரையில் நா ஓடியிருந்த உலகம் வேறு; படித்த பிறகு குடிவந்துவிட் உலகம் வேறு. இப்போது நான் முற்றிலும் ஒரு புதி மனிதன். என்னைப்போல் இன்னும் எத்தனைப் பேரோ தமிழ்நாடு தலைநிமிர வேண்டுமானால், இதுபோன் கட்டுரைகள் இன்னும் வந்துகொண்டே இருக்கவேண்டு

ஆர். கண்ணன், அறந்தை

1—8—71-ம் நாளைய எங்கள் காஞ்சி இதழை காலம் முழுவதும் பொன்னேபோல் போற்றிக் காக்க கடமைப்பட்டுள்ளோம். ஏன் என்று கூறமுடியுமா உங் ளால்? முடியாது என்று உங்கள் தோல்வியை ஒப்பு கொண்டுவிடுங்கள். நானே சொல்லிவிடுகிறேன். அந் இதழில் அறிஞர் அண்ணா அவர்களது புராண ஆராய்ச் கள் இருக்கின்றன.

கோ. விமலாதித்தன், மாயூரப்

இராசமன்னார் குழு அறிக்கை பற்றிய டாக்ட ந. சஞ்சீவி அவர்களது கட்டுரையையும் பிரசுரித்துவிட்டு கூடவே, அது கட்டுரையாளருடைய கருத்துக்கள்தா என்று விளக்கமும் கொடுத்திருக்கிறீர்களே! உங்களை யா அதுபோன்ற கட்டுரைகளைப் பிரசுரிக்கவில்லை என்று கே டார்கள்! கொஞ்சம் துணிவோடு செயல்படுங்கள் இதழாசிரியர் ஒருவருக்கு அந்தத் துணிவு அவசிய இருக்கவேண்டாமோ?

சொ. துரைசாமி, மதுரை-

என்ன இருந்தாலும், டாக்டர். ந. சஞ்சீவி அவர்கள் தனக்கும் சிலப்புச்செல்வருக்கும் இடையே இருக்கு நெருங்கிய உறவை வெளிப்படுத்திக்காட்ட, 1—8—71- நாளைய காஞ்சி இதழைப் பயன்படுத்திக்கொண்டிருக் வேண்டியதில்லை, உங்களுக்கு எனது அனுதாபங்கள்.

ஜே. விநாயகமூர்த்தி, சென்னை-

...சலோ டில்லி!

சீவ. நடராசன்

...ர்வோதயக் குழுவினருள் ஒரு சிலர் தமிழக அரசின் மதுவிலக்கு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் திருமதி சுசிலா நய்யார் அவர்களின் தலைமையில் உண்ணாவிரதம் எனும் புனிதப் பெயரை வைத்து அரசியல் வியாபாரத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

கழக அரசின்பால் காழ்ப்புணர்வு கொண்ட ஒருசில ஏடுகள்கூட இந்நிகழ்ச்சிக்குச் சிறப்பு தந்து சுசீலா நய்யார் அவர்களின் இழந்த விளம்பரத்தை எப்படியும் மீட்டுத் தந்துவிடும் திருப்பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றன.

எல்லாமே உதயமாகிவிட்டதாகக் கூறிக் கொண்டிருக்கும் அவர்களுக்கு மிகவும் முக்கியத்தைத் தரவல்ல இன்னும் ஒன்று தலையில் உதயமாகவில்லையே என்ற உண்மைகூட இன்னும் அவர்களுக்கு உதயமாகவில்லையே என்பதை நினைக்கும்போது அவர்கள்பால் நமக்குக் கழிவிரக்கமே ஏற்படுகின்றது.

கேரளத்திலே மதுவிலக்கு ரத்தாகி எத்தனையோ ஆண்டுகளாகிவிட்டன.

கர்நாடக மாநிலத்தில் கேட்கவே வேண்டியதில்லை. அனாதைப் பிள்ளையாக நடுத் தெருவிலே அலைந்து உயிரை விட்டது.

அண்டை மாநிலமான ஆந்திரத்திலே இந்தியாவின் மொத்த விற்பனையைத் தாண்டுகின்ற அளவுக்கு மதுவின் ஏகபோக விற்பனைக் கூடமாகி மது விலக்கைக் குழி தோண்டிப் புதைத்து மேலே மண்ணைப் போட்டு மூடியாகிவிட்டது.

இந்தச் சம்பவங்கள் இன்று நேற்றல்ல, போன அதற்கு முந்திய மாதத்திலே ஆண்டுக் கணக்கில் அடங்கிய நிகழ்ச்சிகளாகிவிட்டன.

இத்தனையையும் கண்டும் காணாததுபோல் தத்தம் விழிகளை மூடிக் கொண்டவர்கள், இவ்வளவுக்குப் பிறகும் கேளாக் காதினராகக் காலத்தை ஓட்டியவர்கள், ஏனென்று கேட்க வக்கில்லாமல் வாயடைத்துக் கிடந்தவர்கள் இன்று தமிழக அரசின் தற்போதைய மதுவிலக்கு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு மட்டும் தண்டோரா போட்டுத் தம் கண்டனத்தைத் தெரிவிக்க முன்வந்திருக்கிறார்கள்.

மதுவிலக்குக் கொள்கையிலே தமிழகத்திற்கு எத்தகைய நம்பிக்கை உண்டென்பதை திருமதி நய்யார் போன்றவர்கள் உணர்ந்திருக்கும் பக்குவத்திற்கு ஆளாகவில்லையென்றாலும் கேட்டுத் தெரிந்துகொள்ளும் அளவிற்குக்கூட விழையாதது அவர்களின் அறிவுச் சூனியத்தையே காட்டுகின்றது. இந்தக் கருத்திலேதான் நாம் அவர்களின் பொது அறிவையும் அரசியல் நுழைவையும் சந்தேகப்படவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

மதுவிலக்குப் பிரச்சினையைத் தோற்றுவித்த தாயகமாக விளங்கிய காங்கிரஸ் கட்சியே மதுவிலக்கை மாற்றாந்தாய் மனப்போக்கில் கண்டாலும், மற்ற கட்சிகள் எவளோ பெற்ற பிள்ளையென ஒதுங்கிக் கொண்டாலும், திராவிட முன்னேற்றக் கழகம் மதுவிலக்கைப் பொறுத்தமட்டில் சிறந்த ஜனநாயகத்தை மதிக்கும் ஒரு உண்மையான "மனிதன்" பாராட்டுகின்ற அளவுக்கு மதுவிலக்கைக் கடைப்பிடிப்பதிலே ஒரு சரித்திரத்தையே தோற்றுவித்திருக்கிறது என்ற உண்மை, காலம் நெடுந் தொலைவு நோக்கிப் பழையது எனக் கணக்கிட்டாலும் அவை நம் கண்களுக்கு நேற்று நடந்தவைகளாகவே தோற்றமளித்துக் கொண்டிருக்கின்றன என்பது மறுக்கமுடியாத பேருண்மையாகும்.

மதுவிலக்குப் பிரச்சினை என்றைக்குத் தமிழ்நாட்டில் அதுவும் இந்திய மண்ணில் தலைகாட்ட ஆரம்பித்ததோ அன்றைக்கே மற்றவர்களுக்கு வழிகாட்டியாய் அமையும் பண்பில் பகுத்தறிவு இயக்கத் தலைவர் பெரியார் அவர்கள் மதுவிலக்கில் தீவிரமான பற்றுகொண்டிருந்ததன் காரணமாக, நல்ல செயல்கள் எதிலுமே தமிழகம் முன்னின்று ஈடுபடவேண்டும் என்ற உயரிய நோக்கம் அவர் மனத்தே பொதிந்து கிடக்கின்றது என்பதற்கிலக்கணமாக தமக்குச் சொந்தமான ஆயிரமாயிரம் தென்னை பனைமரங்களை வெட்டிச் சாய்த்த நிகழ்ச்சியை யாரும் மறந்

அண்ணா சொன்னவை

எது கடவுட் பணி? எது மதம்?

“இந்த நாட்டில் முதன்முதலில் கல்விக்கூடங்களை அமைத்தவர்களும், கல்விக்காக பெரும் பொருளைச் செலவழித்தவர்களும், அதில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டவர்களும், வெளிநாடுகளிலிருந்து வந்த கிறித்துவப் பாதிரிமார்கள் என்பதை, உணருகின்ற நேரத்தில், அவர்களுக்கும் அவர்களுடைய மார்க்கத்திற்கும் நாம்என்றென்றும் கடமைப் பட்டிருக்கிறோம்.

கிறித்துவப் பாதிரிமார்கள் நம்முடைய நாட்டில் கல்விக்காகவும் மருத்துவத்திற்காகவும் நிரம்பப் பணியாற்றியிருக்கிறார்கள்.

“நான் அறிந்தவரையில் கிறித்துவ மார்க்கம் என்பது ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதுதான் கடவுட்குச் செய்கின்ற அபிஷேகம்; ஏழைகளைச் சரியான வழியில் நடத்திச் செல்வதுதான் ஆண்டவனுக்குத் தருகின்ற பூஜை; அடக்க உணர்ச்சியும் அன்புணர்ச்சியும்தான் ஆண்டவனுக்குத் தருகின்ற நெய்வேத்தியம் என்ற இந்த அடிப்படை கிறித்துவ மார்க்கமானால் — அந்தக் கிறித்துவமார்க்கம் பரவுவதை எல்லோரும் விரும்பவேண்டும்.

[11—7—67ல் பெரம்பூர் தென் போஸ்கோ உயர்நிலைப் பள்ளி புதுக் கட்டிடத் திறப்பு விழாவில் அறிஞர் அண்ணா பேசியது.]

தொகுப்பு:—சி. என். ஏ. பாபு

திருக்க மாட்டார்கள். மறைக்க முயலுவோரும் இருக்க மாட்டார்கள்.

இதே கொள்கைகளுக்கு ஆதரவு திரட்டும் பணிகட்குச் சிகரமாக அதில் பதிக்கும் இரத்தின முகப்பாக விளங்கிய ஒரு நிகழ்ச்சியையும் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது.

எல்லாரும் தெரிந்து, உணர்வு, அறிவுப் பூர்வமாக விளங்கிக் கொள்ளவேண்டிய இந்தப் பிரச்சினையை எல்லார்க்கும் உணர்த்திடத் திறமையற்று, நெஞ்சமற்று இருந்த நேரத்தை, தென்னகத்திற்கோர் திருவிளக்காய்த் தீந்தமிழ்ச் சேர் அணிகலனாய் விளங்கியபேரறிஞர் பெருந்தகையாம் நமது அண்ணா அவர்கள் பாமர மக்களும் நன்குணர்ந்து பின் பற்றும் வண்ணம் கலைவானர் அவர்களின் ஒத்துழைப்போடு "நல்லத் தம்பி" என்னும் மதுவிலக்குக் கொள்கைப் பிரச்சாரப் படத்தை — நகைச்சுவைத் திரைக் காவியத்தை—என்றும் பசுமையாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்ற அளவுக்கு வெளியிட்டிருக்கிறார்கள்.

இராம ராஜ்யம், கிராமராஜ்யம் போன்ற கனவிலும் நிறைவேற, நிறைவேற்ற முடியாத, வெறும் பகற்கனவான பஜனைக் கோஷங்களையே கொள்கை முழக்கங்களாக்கிக் கொண்டிருக்கின்ற சர்வோதய வாதிகள், காந்தீயத்தின் மீது பற்றும் நம்பிக்கையும் கொண்டுள்ளது போல் நடித்து அவரின் ஆத்ம சீடர்கள் எனப் பறை சாற்றிக் கொண்டிருக்கின்ற சர்வோதய வாதிகள், காந்தியடிகள் சொந்தக் குழந்தை போன்று கவனித்த மதுவிலக்கை அனைத்திந்திய அளவிலே அமலாக்கப்பட வேண்டும் என்ற உண்மையான கருத்திலிருந்து வேறு வேறு பாதைகளிலே சென்று எங்கெங்கோ ஒதுங்கிக் குறிப்பாகத் தமிழ்நாட்டிலே தஞ்சமடைந்து தரையைத் தழுவி முத்தமிடும் நேரத்தை நெருங்கிக்கொண்டிருப்பது அவர்களின் தெளிவின்மையைக் காட்டத்தான் பயன்படுமே தவிர வேறெதற்கும் கடுகளவும் உதவாது என்பது திட்டவட்டமாகத் தெரிந்த உண்மையாகும்.

அண்டை மாநிலங்களிலே மதுவிலக்கு கேலிக்குரிய பிரச்சினையாகிவிட்ட நிலையிலும் கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற நாளிலிருந்து இன்று வரை மதுவிலக்கினைப் போற்றி வந்தது சாதனைக்குரியதாகும்.

இத்தகைய உணர்வுப்பூர்வமான கருத்துக்களை மனத்திலே வைத்துக் கொண்டுதான் சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறியதுபோல்கொழுந்து விட்டெறியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரம்போல் மதுவிலக்கு தமிழ் நாட்டில் எந்த வகையில் நீடித்து வந்திருக்கின்றது என்பது நம் கண் முன்னால் கண்டிருக்கின்ற பேருண்மையாகும்.

இருக்கின்ற நிலையைஅனுசரித்து மதுவிலக்கு அமுல் படுத்துவதை நீடிக்க மைய அரசில் உதவித் தொகை கேட்டோம். மைய அரசு காதில் போட்டுக் கொள்ளவேயில்லை.

தமிழகத்திலேஇருக்கின்ற எதிர்க் கட்சினர்கூட மக்கள் நலத்தினை மனத்திலே கொள்ளாது நிர்வாகச் சிக்கல்களை நெஞ்சமும் கனிய நோக்காது, மைய அரசை நோக்கி மது விலக்கிற்காக உதவித் தொகை எதுவும் தராதீர் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களின் உண்மை நோக்கம் நமக்குப் புரியாமலில்லை!!

உண்மை இங்ஙனமிருக்க, சர்வோதயவாதிகள் உண்ணாவிரதம் என்ற பெயரிலே தங்களை வெளியே காட்டிக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்.

எந்தக் காரணங்களை கொள்கைகளைப் பின்பற்றியமைக்காக தோல்வியைச் சொந்தமாக்கிக் காமராசர் சர்வபங்கம் என்ற நாடகத்தைத் திரம்பட நடித்துக்கொண்டிருக்கிறார்களோ, அவர்களே — மைய அரசை நோக்கி தமிழகத்திற்கு உதவித்தொகை தராதீர் என்ற கூப்பாடு போட்ட அவர்களே— சர்வோதய வாதிகளோடு ஐக்கியமாகிவிட்டிருக்கின்றார்கள்!!!

இவர்களைச் சார்ந்தவர்களே— இன்றும் இவர்களின் பங்காளிகளாக இருக்கின்றவர்களே — ஆளுகின்ற மாநிலங்களில் மதுவிலக்கு ரத்தாக்கப்பட்டதை எதிர்த்து ஒரு சொல்கூடக்கூறாதவர்கள் தமிழகத்திலே உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள்!

உண்மையிலே ஜனநாயகத்தின் மீது இவர்கட்கு நம்பிக்கை இருந்தால், மக்களுக்கு உண்மையான கைம்மாறு கருதாது தொண்டாற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தால் ஒருமைப்பாட்டுணர்வினை நெஞ்சத்தேகொண்டு ஊறுதேடாத வகையிலே அவர்கள் செயல் முறைகளைக் கொண்டிருக்கின்றார்கள் என்றால் அவர்கள் கண்டனக் கணைகளைத் தொடுக்க வேண்டிய இடம்—உண்ணாவிரதம் இருக்கவேண்டிய இடம்—மறியலின் பேரால் கிளர்ச்சியில் ஈடுபடுகின்ற இடம்—தமிழகமல்ல, டில்லி தான் என்பதனை நாம் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட வேண்டியவர்களாக இருக்கின்றோம்!

★

61 வருட அனுபவ பிரசித்திப் பெற்ற

பரங்கிப்பேட்டை

வைத்தியம்

சென்னையில்

நேரில் சிகிச்சை பெறலாம்.

ஆலோசனைக்கு :

ஹக்கீம்

M. M. முஸ்தபா, R.M.P.

சித்த ஆயுர்வேத யூனானி முறை ஜனநேந்திரிய சாஸ்த்திரத்தில் அதிக அனுபவம் உள்ளவர்.

சகலவித சர்ம நோய், ஸ்கலிதம், ஆண்மை குறைவு, நரம்புத் தளர்ச்சி, பெண்களின் மாதவலி, வெள்ளை படுதல், நீரழிவு வாதம், ரத்தக் கொதிப்பு, மூலம், மற்றும் பல நோய்களுக்கு கைதேர்ந்த சிகிச்சை பெறலாம்.

நோய் விபரம் எழுதி V.P.P. மூலம் மருந்து பெறலாம்.

முகம்மதியா வைத்தியசாலை

[டிரஸ்ட்]

130, பிராட்வே, சென்னை-1.

போன் : 23643

H.O. பரங்கிப்பேட்டை, தென் ஆற்காடு ஜில்லா.

சிவன் சொத்து....?

சிறுகதை!

புலவர் அரிமதி தென்னகன்

சிவனூர்புரம் ஏரிக்காத்தாரப்பன் என்றால் அவ்வட்டாரத்து மக் ளுக்குக் கைகண்ட கடவுளாகும். வனூர்புரம் உருவானதும், அங்கு ரிக்காத்தப்பனுக்குக் கோயில் ழுப்பப்பட்டதும் ஒரு வேடிக்கை ாகும்.

"கடவுளே, என் பங்காளி ஒரு ன் செத்து, இந்தச் சொத்துக் ளுக்கெல்லாம் நான் ஒருவனே ாரிசாக ஆனால், உன் பெயரால் ஊரையும் உருவாக்கி, உனக்கு ஒரு காயிலும் கட்டுகிறேன்'' என்று வண்டிக் கொண்டானும் ஒரு ற்றரசன்.

பக்தனின் அன்பு வேண்டு காளுக்குப் பரமனும் செவிசாய்க் வே, அந்தச் சிவபக்தன் ஊரை ம் உண்டாக்கி, கோயிலையும் ழுப்பினானும்.

சிவனூர்புரம் ஏரியை வெட்டு த்தவனும் அந்தச் சிவபக்த ரோமணிதானும். அந்த ஏரியை ம் காத்து, அவ்வூர் மக்களையும் ாப்பவன் என்ற கருத்திலேதான் வ்வூர் சிவபெருமானுக்கு ஏரிக் ாத்தாரப்பன் என்ற திருநாமம் சூட்டப்பட்டதாம்.

அந்த ஏரி ஒருமுறை உடைப் படுத்துக்கொண்டு ஊரே அழிந்த பாதும், சிவபெருமானின் சக்தி ால் அந்தக் கோயிலுக்கு மட்டும் பத்தே வரவில்லையாம்.

ஊர் புதுப்பிக்கப்பட்டும் பெயர் ட்டும் மாறாத அந்த ஊர், ழாய்க் கிணறுகளின் அருளால் ரியைப் பற்றிய நினைவே இல்லா ல் இருந்தது.

எப்படியோ...!!

ஏரிக்காத்தாரப்பன் கோயிலுக் ச் சொத்தில் மட்டும் குறை ல்லை. தங்கமும், வைரமும் ஏரிக் ாத்தாரப்பனைச் செல்வபிரானாக ூக்கிவைத்தன.

உயர்ந்த மதிலும், பெரிய பெரிய தவுகளும், தூக்கவே முடியாத ூட்டுக்களும் துணை நிற்க ஏரிக் ாத்தாரப்பனின் நகைகளுக்கு ந்தவித ஆபத்தும் உண்டாக ில்லை.

ஒரு நாள்...!!

ஊரே பரபரப்பில் மூழ்கியது!! தவுகள் எரிக்கப்பட்டுக் காட்சி ளித்தன; பூட்டுக்கள் திறக்கப் ட்டுக் கிடந்தன.

என்றாலும் கோயிலுக்குள் ஒருவ ரும் நுழையவில்லை. உள்ளே நுழைந்த இரண்டொரு பெரிய மனிதர்களும் மூலஸ்தானத்துக்கு வெளியே நின்றுகொண்டிருந் தனர்.

உள்ளே போனால், ஏரிக்காத்தா ரப்பனின் உடல் எரிந்துவிடுமா என்ன? பாவம் வந்துவிடுமா என்ன?

அப்படித்தான் அவர்கள் நம்பி னார்கள். அங்கே செல்லுவதற்கு என்றே பிறந்த, உரிமை படைத்த, அந்த ஆண்டவனிடமே வரம் பெற்றவரின் வருகையைத்தான் அவர்கள் எதிர்பார்த்து நின்றார் கள்.

"அப்பனுக்கு அணியப்பெற்ற நகைகள் அவ்வளவும் போயிற்றா? ஏதாவது, ஒன்றிரண்டாவது மிஞ்சிற்றா?''

அவர்களின் மனம் துடியாய்த் துடித்தது. ஆனாலும் யாரும் உள்ளே நுழையவில்லை. யாரோ ஒரு சிலரின் உயர்ந்த சாதித் தன்மையைக் காப்பாற்ற இவர் களுக்கு அவ்வளவு அக்கறை.

என்ன செய்வது?

குனிந்து குனிந்து, சிலர்க்குக் குதிரையாக இருந்து நிமிர்ந்து பார்க்கவே அவர்களால் முடிய வில்லை.

''அதோ சாமி வந்துட்டாரு'' எல்லோரும் திருப்பிப் பரர்த்தார் கள்.

ஆச்சார சீலராக, அனுஷ்டானக் காவலராக வேத வித்தராக 'சாமி' வந்துகொண்டிருந்தார்.

அவர் பெயர் அனந்தராம ஐய ராக இருந்தாலும், அவரைச் 'சாமி'யாக்கிமகிழ்ந்தனர் அவர்கள்.

கோயிலுக்குள் இருப்பதும் சாமி, அனந்தராம ஐயரும் சாமி என் றால், உண்மையான சாமிதான் எது என்ற கவலை யாருக்கும் இல்லை.

அனந்தராம ஐயருக்கோ, தான் 'சாமி'யாக்கப் பட்டதில் பரம சந்தோஷம்.

"பாத்திங்களா சாமி, எவனோ பாவிப்பய கோயில்லையே கொள்ளை யடிச்சிட்டானே... ஏரிக்காத்தாரப் பன் மேலே ஒரு நகையும் காணோமே ...... போங்க சாமி ... போங்க ...... எதையாவது விட்டு வச்சிட்டுப் போயிருக்கானான்னு பாருங்க.''

"விசேஷ பூஜையாச்சேன்னு எங் கப்பனுக்கு எல்லா ஆபரணங்களை யும் போட்டேனே...''

உள்ளே சென்ற ஐயர் உடல் நடுங்க கண் கலங்க வெளியே வந்தார்.

"படுபாவி, எதையும் விட்டு வைக்கலையே''

அனந்தராம ஐயர் துடியாய்த் துடித்தார்! துவண்டார். அங்கிருந் தவர்களுக்கு ஐயரைச் சமாதானப் படுத்துவதே பெரிய கவலையாக இருந்தது.

"கவலைப்படாதீங்க சாமி; ஏரிக் காத்தாரப்பன் அவனைச் சும்மா விடமாட்டார்...'' என்று ஐயரைச் சமாதானப்படுத்திய ஒரு பெரிய மனிதர் சூட்டோடு சூடாகப் போலீஸ் — ஸ்டேஷனுக்கும் ஒரு ஆளை யனுப்பினார்.

அரை மணி நேரத்துக்குள் ஒரு போலீஸ் படையே அங்கு வந்தது.

போலீஸ் அதிகாரி, மூலஸ்தா னத்தைத் தவிர, எல்லா இடங் களையும் பார்வையிட்டார். காணா மற்போன பொருட்கள் யாவை என்ற பட்டியல் எடுப்பதில் அதி காரி கவனம் செலுத்தினார்.

"சாமி''

அந்த அதிகாரிக்கும் அனந்த ராம ஐயர் சாமியாகவே பட்டார்.

"என்னென்ன நகைங்க இருந் தது? என்னென்ன நகைகளை இரவு அணிவிச்சிங்க; எது எது காணாமப் போச்சுங்கற விவரமெல்லாம் தேவை; கொஞ்சம் சொன்னிங் கன்னா...''

இடுப்பில் கட்டியிருந்த துண் டினை நன்றாக இழுத்துவிட்டுக் கொண்டார். ஒருமுறை தன்

(16-ம் பக்கம் பார்க்க)

போதை தரும் புராணம்!

அறிஞர் அண்ணா

பெரிய புராணத்தைப் பற்றிய நமது கட்டுரைகள், தமிழ் நாட்டுச் சைவமெய்யன்பர் கூட்டத் தலைவர்கட்கும், முத்தமிழ் கற்ற வித்தகர்கட்கும், அனுப்பப் பட்டதாம், கோபங் கொண்ட நண்பரொருவரால்! நல்ல காரியம் நடைபெற்றது. இது போன்ற கோபம், இலாபமே! அந்தத் "தலைவர்கள்" நமது கண்டனத்தைப் படித்துவிட்டு. என்ன எண்ணுவார்கள்? கழுவேற்றுகிற காலமாக இல்லையே! கடம்பா! என்று வருந்துவர்; வேறென்ன செய்வர். சபிக்கத் தெரிந்தவர்கள் அதிலே ஈடுபடுவர்; ஆனால், நமது வாதத்திலே இன்ன இடம் ஒடிசல் என்று எடுத்துக்காட்டத் துணியார். பல "அன்பர்களுக்கு" நமது கண்டனச் சுருணை அனுப்பப்பட்டது கேட்ட நாம், மேலும் அவர்களுக்கு விருந்தளிக்க, பெரிய புராணத்தைப் பற்றிய விளக்கத்தை விட்ட இடத்திலிருந்து தொடங்குவோம். இளைஞர் உலகம் இன்று, எதெது தேவை என்று எண்ணுகிறதோ, அவைகள் யாவுமோ அல்லது அவைகளிலே பெரும் பகுதியோ, புராண இதிகாசங்களிலே உண்டு என்று கூறுவதன் மூலம், மேலும் சில நாட்களாவது, அவைகளுக்கு உயிர் தர முடியுமா என்ற முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளவர்கள், பெரிய புராணத்திலே, சீர்திருத்தக் கருத்துகள் உள்ளன என்று பேசுகின்றனர். பெரிய புராணத்திலே மட்டுமல்ல, எந்தப் புராணத்திலும், அவர்கள், சீர்திருத்தக் கருத்து இருப்பதாகவே பேசுகின்றனர். இதனால், அந்தப் புராணங்களிலே, சீர்திருத்தக் கருத்துகள் உள்ளனவா இல்லையா என்று ஆராயப் புகுமுன், ஒரு உண்மை தெளிவாகிறது. அதாவது, சீர்திருத்தம் அவசியம் என்பதை இவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள், அதற்கான வேலையில் பலர் ஈடுபட்டுள்ளதை உணருகிறார்கள், வேறு விஷயங்களிலே மக்கள் கொண்டுள்ள அக்கறையைவிடச் சற்று அதிகமாகவே சீர்திருத்தத் துறையிலே அக்கறை செலுத்த வேண்டுமென்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள், அறிவாளிகள் என்ற பட்டிக்குத் தம் பெயர் பொறிக்கப் பட வேண்டுமானால் தமக்கும் சீர்திருத்தத்திலே ஆர்வம் இருப்பதாகவும், அதற்கான பணியிலே தாம் ஈடுபட்டிருப்பதாகவும், மற்றவர்கள் சீர்திருத்தத்துக்காக எங்கெங்கோ தேடி அலைகிறார்களே, பாபம், இதோ நாம் கண்டுபிடித்திருக்கிறோமே, இதனைக் கூறவேண்டும் என்ற எண்ணங் கொண்டிருப்பதாகவும், காட்டித் தீரவேண்டிய அளவுக்கு நாட்டு மக்களின் நினைப்பின் நிலைமை இன்று இருப்பதும், தெளிவாகத் தெரிகிறது. இனாகுலேஷன் சரியான முறை என்று சிலரும், அது தேவையில்லை என்று வேறு சிலரும் பேசிக்கொள்கிறார்கள் என்றால், இரு கருத்துகளிலே, எது தக்கது என்று ஆராய்வதற்கு முன்பே, ஊரிலே, பிளேக்—காலரா போன்ற கொடிய வியாதி பரவி இருக்கிறது என்பது ஏற்பட்டு விடுகிறது. கருத்து வேற்றுமைக்கு இடமின்றி. அதுபோலத்தான் இன்று, புராணங்களிலே சீர்திருத்தக் கருத்துக்கள் உண்டா இல்லையா, என்பதிலே உள்ள கருத்து வேற்றுமை, கருத்து வேற்றுமைக்கே இடமில்லாத ஒரு கருத்து நாட்டிலே இருப்பதைக் காட்டுகிறது; அதாவது சீர்திருத்தம் தேவை என்பது. இது, வரவேற்கப்படவேண்டிய நிலைமை.

ஃ ஃ ஃ

சீர்திருத்தம் தேவை என்பதை அனைவரும், 'செக்கு மாட்டுச் சுபாவக்காரர்' நீங்கலாக மற்றவரனைவரும், ஒப்புக் கொள்கின்றனர்; ஒப்புக் கொள்பவர்களில் சிலர் என்ன செய்வதென்று சிந்திக்காமல் இருக்கிறார்கள், சிலர் சிந்திக்கிறார்கள், தெளிவு பிறக்காமல் குழம்புகிறார்கள், சிலர் சிந்தித்து வழிதெரிந்து, வழிபடுகுழிகளும், பாறை, கோரைகளும் நிரம்பிக் கிடப்பது கண்டு பயந்து விடுகின்றனர், சிலர் பாதிப் பாதை போகின்றனர். பிறகு, முன்னேறிய வேகத்தைவிட அதிக வேகமாக மிரண்டோடுகிறார்கள் பின் நோக்கி. மற்றும் சிலரோ, பாதை எப்படி இருப்பினும் சரி, அவ்வழி சென்றே தீருவது என்று துணிந்து செல்கின்றனர்; அங்ஙனம் அஞ்சா நெஞ்சுடன் செல்பவர்களைத்தான், 'தம்பி! நில்!' என்று கனிவுடன் அழைத்துச் சீர்திருத்தத்துக்கான செம்மையான கருத்துக்கள் இங்கே உள்ளன, என்று கூறி, செல்லுக்குத் தப்பிய சில ஏடுகளைக் காட்டுகின்றனர், செந்தமிழ் கற்ற அன்பர்கள். அவர்கள் காட்டும் ஏடுகளிலே, அவர்கள் கூறுவதுபோலச்சீர்திருத்தக் கருத்துகள் உள்ளனவா என்று ஆராயப் புகு முன்பு, நமக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்குக் காரணம், அவர்களும் சீர்திருத்தத்தை வரவேற்கிறார்களே என்பதுதான். அவர்களின் ஆர்வத்தைப் பாராட்டத்தானே வேண்டும்! ஆனால் இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், தென்னை மரத்தின் மேல் ஏறிய கள்ளனை விரட்டும் போது, 'காய் திருடச் செல்லவில்லை மாட்டுக்குப் புல் எடுக்க ஏறினேன்' என்று சொன்னதாக உள்ள கதை இருக்கிறதே, அந்த 'ரகமாக' இருக்

கிறது இவர்களின்வாதமும். 'தென்னையில் ஏதடா தம்பி! புல்?' என்று கேட்டவருக்கு, 'இல்லை என்று தெரிந்ததால்தான் இறங்கி விடுகிறேன்' என்று சொன்னானாமே கள்ளன், அது போலவே, புராணத்திலே போய்ச் சீர்திருத்தக் கருத்தைத் தேடுகிறாயே இருக்குமோ என்று கேட்கத் தொடங்கினால், இல்லை என்பதைக் கண்டு சொல்லத்தான் இத்தனை ஏடுகளையும் ஆராய்ந்தேன்' என்று பேசுகிறார்கள்.

ஃ ஃ ஃ

புராணங்கள், பக்திமார்க்கத்துக்கான ஏடுகள், இலக்கியச் சுவையுடன் இருப்பினும் சரி, இல்லாது போயினும் சரி. அந்த ஏடுகளைப் படித்து 'ஐயனின்' பெருமையை, 'அம்மை'யின் அருமை, 'அடியவர் சிறப்பை உணரலாம் என்று கூற முடியுமே தவிர, அவைகளின் மூலம், சீர்திருத்தக் கருத்துகளைப் பெறலாம், என்று எண்ணுவது பயனற்ற நினைப்பு. முதலில் இதனை "மெய்யன்பர்கள்" தைரியமாக ஒப்புக்கொள்ளாமல், "இது வெறும் புராணமல்ல! இதிலே உள்ள புதை பொருள் அமோகம். இதிலே சரிதம், பூகோளம், விஞ்ஞானம், தத்துவம், கணிதம், சீர்திருத்தம் போன்ற இன்ன பிற உண்டு' என்று பேசுவது, ஆராய்ச்சி மனப்பான்மைக்கு அத்தாட்சி என்று சிலர் எண்ணுகிறார்கள்; உண்மை அது அல்ல, பல இருப்பதாகச் சொன்னால் 'சிலதாவது' தேறாதா தேறாதா என்ற சபலம். நீண்ட பட்டியைத் தந்தாய், யாராருக்கு எதெதில் பிரியமோ, அதற்காகவென்று, புராணத்தை நாடுவர் என்ற ஆசை! இல்லை என்றால், திட்டமாகத் தெளிவாக, வரையறுத்துக்கொண்டு பேசுவர், மத போதனையை, எளிதாக்கவும், பாமரர் மனமும் பரவசமடையவும், சிக்கலான தத்துவங்கள் பயன்படாது என்று கண்டவர்கள், எந்த மதத் துறையிலே தங்களுக்கு அக்கறை இருந்ததோ, அதனைப்பரவச் செய்வதற்குக் கண்டு பிடித்த, சாமர்த்தியமான வழி, புராணம். அவர்களின் எண்ணம், அந்தக் காலத்தின் கூறு. எனவே அத்தகைய புராண போதகர்கள், பழிக்கப்பட வேண்டியவர்களல்ல; அவர்கள் அந்தக் காலத்தில், தங்களுக்கு யுக்தமானது என்று எதை நம்பிச் செய்தார்களோ, அதனை, விடாப்பிடியாக இன்று கட்டி அலைகிறவர்களும், மக்களின் இன்றைய அறிவுத் தாகத்தைத் தீர்க்க, அந்தப் புராணமேபோதும், என்று நம்புகிறவர்களும், உலகில் தோன்றியுள்ள எந்தப் புதுக் கருத்தும், புராணத்திலே உண்டு என்று மயக்கமொழி பேசுவோரும் ஆகிய திருக்கூட்டம் இருக்கிறதே, அதுவே, இன்று கண்டனத்துக்கு ஆளாகிறது. "இதோ அஞ்சுகண்ணன் வருகிறான், சாப்பிட்டு விடு" என்று மிரட்டி, அன்பையும் அன்னத்தையும் கலந்து குழந்தைக்கு ஊட்டும் தாயிடமல்ல கோபம் நமக்கு, குழந்தைப் பருவம் கடந்து குமரனான பிறகு, 'ஐஞ்சு கண்ணனை நம்பு என்று கூறும் மூதாட்டியிடமும், இவ்வளவு வயதான அம்மையார், உண்மை அனுபவமின்றி இதனை உரைத்திடுவரோ என்று எண்ணுங்கால், ஐஞ்சுகண்ணன் என்று ஒரு வகையினர், இருக்கவுங்கூடும் என்றே எனக்குத் தோன்றுகிறது என்று பேசுபவர்களிடமும், ஐஞ்சுகண்ணன் என்று நமது ஒளவையார்கள் கூறுங்காலை ஐயகோ! ஈதென்ன சிறுமதி என்று சீறும் சீர்திருத்தவாதிகாள் கேண்மின்! ஐஞ்சுகண் என்றால், ஐந்து கண்கள் என்பதல்ல பொருள், அஞ்சுகண் என்பது ஐஞ்சுகண் என்று திரிந்துபோயிற்று, அஞ்சு கண் என்றால் என்னை? கண்டவரை அஞ்சச் செய்யும் கண்! இதனையேதான் தாய் மொழிகிறாள், நந்தாய் மொழியினை பழிக்கலாமோ?என்று பேசும் சொல்லில் செப்படி வித்தை செய்து காட்டுபவரிடமுமே, அறிவு உலகம் கோபிக்கிறது-அவர்களின் போக்கையேதான் கண்டிக்கிறது. புராணத்தில் மத போதனை, ருசிகரமான கதைகள் மூலம் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளிலே, வேறு துறைகளுக்குத் தேவையான கருத்துகளைத் தேடுவது வீண் வேலை— அல்லது பிறரை ஏய்க்கும் வேலை. 'தென் இந்திய ரயில்வே கயிடை'ப் புரட்டிப் பார்க்கும் ஒருவன், டில்லிக்கும் அரித்துவாரத்துக்கும் இரயில் புறப்படும் நேரத்தைக் கூற எங்ஙனம் இயலும்! ஒரே பாதையின் 'கயிடாக' இருந்தாலுங்கூடப் பழைய கயிடைப் புரட்டிப் பயனிராதே. ஏன், இந்தச் சாதாரண விஷயத்தைப் புரிந்துகொள்ள, பசு பதி பாசம் என்பன போன்ற பிரமாதமான கொள்கைகளைப்பற்றிய சிக்குகளை அறுக்கும் பெருமதியினர், சிரமப்படுகின்றனர். புராணத்தை, மத போதனை ஏடு என்று ஒப்புக்கொண்டு, அதற்காகத்தான் அவை பயன்படும் என்பதைத் தைரியமாக ஒப்புக் கொள்ள வேண்டும். மலச்சிக்கல் முதற்கொண்டு மார் வலி வரையிலே உள்ள 124 வியாதிகளைக் கண்டிக்கும் சூரணம்; நோய் இல்லாவிட்டாலும் சாப்பிடலாம், தேக ஆரோக்கியத்துக்கு; அது மட்டுமில்லை, பித்தளைப் பாத்திரங்களை இந்தச்சூரணத்தைக்கொண்டு துலக்கினால், அசல் தங்கம்போல் பிரகாசிக்கும், என்று வகையுள்ள எந்த வைத்தியராவது, தமது மருந்து பற்றிக் கூறுவாரா? அனுபவமும் திறமையும் உள்ள வைத்தியர் ஒரே மருந்தையே கூட, இன்ன விதமான தேகமுள்ளவர் தேனிலும், இன்னவிதமுள்ளவர் பாலிலும் கலந்துச் சாப்பிட வேண்டும் என்று சொல்வார்களே! பிறவிப் பிணியைப் போக்கும் மருத்துவ முறையாம் மார்க்கம்! அதற்காக ரசாயனம், சர்பத்து, லேகியம், கஷாயம், மாத்திரை, போன்ற பல மருந்து வகைகள் உண்டு. அவைகளிலே, புராணம், போதை தரும் லேகியம், தத்துவம்கஷாயம், காவியச் சுவையுடன் கூடிய கதைகள் சர்பத்து போன்றவை எம்மிடம் உள்ள இம் மருந்து எப்பிணியும் போக்கும், பிணி போக்கி மட்டுமல்ல, பீடைநீக்கி, அதுமட்டுமல்ல, பித்தளையைப் பொன்னுமாக்கும் என்று பெருமை பேசுவது, அழகா, நியாயமா, யூகமுள்ள செயலாகத்தான் அது மதிக்கப்படுமா?

ஃ ஃ ஃ

கற்பனை லோகங்களைச்சித்தரித்த கவிவாணர்கள், கண்டனத்துக்கு உள்ளானதற்குக் காரணம் என்ன? அந்தக் கவிவாணர்களின் சித்திரங்களை, வெறும் கற்பனைகள் என்று ஏற்றுக்கொண்டு பேசாமல், அந்தக் கவிவாணர்களைத் தாங்கிக் கொண்டிருப்பதாகக் கருதும் கலாவாணர்சள், புலவர்கள், குழு, அவை கற்பனை அல்ல, அவைகளிலே வரலாறு மிளிருகிறது, சீர்திருத்தக் கருத்துகள் பூத்துக்கிடக்கின்றன, என்று பேசுகிற போக்குதான். சில்லரை அதிகாரியின் சீற்றமும் சிறுசெயலும், எங்ஙனம் ஆட்சியையே மக்கள் அலட்சியப்படுத்தவும் கண்டிக்கவும் தூண்டுகின்றதோ, அதுபோலவே, இந்தப் 'புலவர்' என்போரின், போக்கே, கவிவாணர்களைக் கண்டனத்துக் குரியவர்களாக்கிவிட்டது! கவிவாணர்களுக்கு முதல்தரமான கேடு செய்பவர்கள், கவிதாமண்டலத்துள் உறைபவர், கவிதாமணிகளைக் காக்கக் கடமைப்பட்டவர், என்று கனத்தகுரல் எழுப்பி, நண்பரென

நடிப்பவர் தாம். குளத்துநீர் குடிக்க உதவும் என்பது பொது உண்மை. ஆனால் எல்லாக் குளமுமா? இல்லை! சில குளிக்க மட்டுமே உதவும்! சில மாடு குளிப்பாட்ட மட்டுமே உதவும்! அது மட்டுமில்லையே! குடிக்கும் நீர் உடைய குளமேகூட வெப்பம் அதிகமாகி, வறண்டு கிடக்கும் போது, சேறு மேலிட்ட நிலையில் இருக்குமானால், குடிக்கப் பயன் படாது. குளம்தானே, குடிதண்ணீர்தான் இது, என்று கூறுபவர் யார்? அதுபோலப் புராணங்கள் சேறு நிரம்பிப்போன குட்டைகளாகவும், (மட்ட அறிவுக்கு மட்டுமே பயன்படக்கூடிய விதத்திலே) மாடு புரளும் மடுவாகவும், பலப்பல விதத்திலே உள்ளன. ஊற்றுநீர் காண உலகு துடிக்கிறது, இங்கோ, இவர்கள், குழம்பிய குட்டை, தூர்ந்துபோன திருக்குளம், துவர்ப்பு நீர்ப்பள்ளம், இவைகளிலே புகுந்து, நீராடுகிறார்கள், போதாக்குறைக்கு வாலிபர்களையும் அழைக்கிறார்கள். "வாரீர் நீராட!" என்று. வருவரா? நல்ல முறையில் நடத்தப்படும் நகராட்சியிலே, தீரமான ஆணையாளர் இருந்தால், அவர், நாற்றமடிக்கும் குட்டைகளைத் தூர்த்துவிடச் சொல்வார், இல்லையேல், அங்கே எவரேனும் குளித்தோ, அந்நீரைக் குடித்தோ, நோய் கண்டு இறந்துபடுவரே, அதன் பயனாய் ஊரிலேயேகூட நோய் பரவக்கூடுமே, என்று எண்ணி. அதுபோலவே, தன்னாட்சியிருந்து, அது தகுதியானவர்களிடமும் இருக்குமானால், அறிவுத் தாகத்தைத் தீர்க்கமுடியாத இந்த ஆபாசப் பள்ளங்களை மூடிவிட்டு, புதிய ஊற்றுகளைக் கண்டுபிடிப்பர். நீர் நிலையங்களையும் அமைப்பர். இன்று குடலைப் புரட்டும் நாற்றமடிக்கும் குளத்துக்குக் காவல்புரிவதைப் பெரியதோர் சேவை என்று கருதுபவர்கள், அந்த நீர்நிலையங்களிலே வேலை பெறலாம், இன்பம் உறலாம். ஏன், அவர்கள் இதற்குத் தங்களைத் தயார் செய்து கொள்ளக்கூடாது. இன்றளவுவரை, இடிந்த கோட்டைகள், சரிந்த மதில்கள், தூர்ந்துபோன அகழிகள் ஆகியவற்றைக் காட்டி, ஆங்காங்கே சிலர் "இது துரோபதை மஞ்சள் அரைச்ச இடம்," 'இது பீமராஜாவின் பாதம் பட்டதால் ஏற்பட்ட பள்ளம்," "இது ஏகலைவன் கட்டைவிரலிலிருந்து ஒழுகிய இரத்தத்தின் கறை" என்று காட்டிப் பணம் கேட்டுப் பிழைக்கும், "வழி காட்டுவோர்" போலிருக்கவேண்டும்? எவ்வளவு அறிவு இந்தச் சத்தற்ற காரியத்திலே பாழாக்கப்படுகிறது, என்பதை எண்ணி வருந்தி, இவர்களைக் கண்டிக்கிறோமே தவிர வேறு என்ன!

ஃ ஃ ஃ

புராணங்களிலே, எதற்காகச் சீர்திருத்தக் கருத்தைப் புகுத்தப் போகிறார்கள். பசுவும் புலியும் ஒரே துறையில் நீர் குடித்தது, பரமசிவன் ரிஷபவாகனரூடராக வந்து சேர்ந்தார் வெட்டப்பட்ட தலை மீண்டும் ஒட்டிக்கொண்டது, என்ற அற்புதங்களைப் புராணங்களிலே புகுத்தி இவை யாவும் ஈசனை நேசித்ததன் பலன் என்று முடித்து, இத்தகைய மேலான பலனை, ஆண்டவன் அருளைப் பெற வேண்டுமானால். நீங்களும் "பக்தி செய்து கொண்டிருங்கள்' என்ற உபதேசம் செய்ய இந்த புராணங்கள் எழுதப்பட்டன. இதிலே, சீர்திருத்தம் நுழைய என்ன அவசியம் இருக்க முடியும்? சீர்திருத்தம் என்றால் என்ன? இருப்பதைச் சீராகும்படி திருத்துவது. கெட்டுக் கிடக்கிறது, ஆனால் திருத்தக்கூடிய அளவிலே இருக்கிறது, திருத்திவிட்டால் கேடு போய், சீராகிவிடும் என்பதுதானே அதன் பொருள். அடியார்கள், எதைக் கெட்டுக் கிடக்கிறது என்றார்கள்? சமூகத்திலே ஜாதி பேதம் தலைவிரித்து ஆடுகிறது. அதை ஒழித்தாக வேண்டும், எல்லா மக்களையும் ஒன்றுபடுத்திவிட வேண்டும், ஏழை பணக்காரன் என்ற பேதத்தைப் போக்கவேண்டும், சேரிகளைச் சீர்திருத்த வேண்டும். உழவனின் உழைப்புக்குத் தக்க ஊதியம் தரவேண்டும், என்ற இன்னோரன்ன பிற சீர்திருத்தங்கள் தேவை என்று செப்பினரா? அதற்காக, அவர்களிடம் அன்பு காட்டிய அரசர்களிடம் வாதாடினரா? பிரச்சாரம் புரிந்தனரா? இல்லையே! அவர்களுடைய கவலை எல்லாம், பக்தி பரவ வேண்டும், பரமனைத் தொழ வேண்டும், மூர்த்தி ஸ்தலம், தீர்த்த யாத்திரைகளின் பெருமையை மக்கள் அறிதல் வேண்டும் என்பதிலே சென்றதேயொழிய, இன்று நாம், "சீர்திருத்தம்" என்று எண்ணுவதிலா அவர்கள் அக்கறை காட்டினர்? காட்டியிருக்க முடியுமா?

ஒரு கட்டிடம் கலனாகியிருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதைப் புதுப்பிக்க ஆரம்பிக்கிறோம். அதற்கான அதிகாரி திட்டம் தீட்டுகிறார். முதலில் அவர் கேட்பார் இந்தக் கட்டிடம் கட்டி எத்தனை வருடங்கள் ஆயிற்று என்று, இந்தக் கட்டிடம் தாது வருடப் பஞ்சத்திற்கு முன்பு கட்டப்பட்டதென்று நம் தாத்தா கூறியதாகக் கூறுவோம். ஓ! அப்படியா? மிகப் பழைய கட்டிடம்; ஆகையால்தான் கலனாகி விட்டது என்று அவர் கூறுவார். பழைய கட்டிடமாயிருந்தாலும் கடைக்கால் எத்தனை அடி ஆழம் என்பார் 10, 15, அடி என்போம், மணல் எத்தனை வண்டிகள் கொட்டினார்கள் என்றால் 40, 50 வண்டிகள் என்போம்; பாலாற்று மணலா வேகவதி ஆற்று மணலா என்ற கேள்வியும் பிறக்கும். வேகவதி ஆற்று மணல்தான் என்போம். அது உப்பு மண் கலந்த மணல் அதனால்தான் சீக்கிரம் உளுத்துப் போய்விட்டது. அதை அகற்றி உரமான மணலைப் போடவேண்டும் என்பார் அவர். அதுபோலத்தான் சமுதாயம் என்னும் கட்டிடமானது கலனாகிச் சரியும் நிலையிற் கிடக்கிறது. நம் சமுதாயத்தின் அடிப்படை சரியல்ல. அது உவர் மண்ணால் உண்டாக்கப்பட்ட அஸ்திவாரத்தின்மீது அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அது காலப்போக்கில் சரிகிறது. அதுவும் நாம் காற்று வசதிக்காக மாடி மேல் மாடி கட்டிக்கொண்டே செல்லச் செல்லச், சென்னையில் சமீபத்திலே சரிந்த "பிருதிவி இன்ஷியூரன்ஸ்" கம்பெனிக் கட்டிடம்போல் விழுந்து கொண்டேதான் இருக்கிறது. சரிந்த கட்டிடத்தின் சாரலிலே நின்று கொண்டு நமது புலவர் பெருமக்கள் பெரிய புராணத்தையும் கம்பஇராமாயணத்தையும் ஓதிச் சரியாமல் செய்யப் பார்க்கிறார்கள். தேசியத் தோழர்களோ, தக்ளியையும், இராட்டினத்தையும் கொண்டு சரியும் கட்டிடத்தைத் தாங்கத் துடிக்கின்றனர். வேதாந்திகளோ கீதையும். வேதமும், தத்துவ விசாரணையும் சரிவைச் சமாளிக்கும் என்று நம்புகின்றனர். எல்லோரும் கட்டிடம் சரிவதைக் காண்கின்றார்கள்; ஒப்புக்கொள்ளுகிறார்கள், ஆனால் சரிவதைத் திருத்துவது எப்படி? சரியாமல் அமைப்பது எப்படி என்பதிலேதான் தகராறு.

தோழர்களே! நான் கூறுகிறேன் இந்தச் சமுதாயம் சரிகிறது,

சரிந்து கொண்டிருக்கிறது. நெடு நாட்களாகவே சரிந்துகொண்டு வருகிறது. நாம் அப்படிப்பட்ட வீறுகெட்ட சமுதாயத்தில் சின்னு பின்னமாக்கப்பட்ட சமுதாயத்தில், சிதறிக் கிடக்கும் சமுதாயத்தில், வாழ்கிறோம், சமுதாயம் ஆட்டங் கொடுத்து ஆடுகிறது; இந்த நிலையிலே நாம் நம்மை உணர்ந்து, நம் தேவையைத் தெரிந்து, நம் சமுதாயத்தை மாற்றி அமைக்க முற்படாவிட்டால், சமுதாயம் ஆடுவது தெரியாமலேயே நாம் அமிழ்த்தப்பட்டு விடுவோம். நான் கூறுவது வேடிக்கைப் பேச்சல்ல. நடக்காத, நடக்கக்கூடாத, நடக்கமுடியாத செயலும் அல்ல. அமெரிக்காவிலே வாழ்ந்திருந்ததாகச் சொல்லப்படும் சிகப்பு இந்தியர்கள் இன்று எங்கே? அவர்களது வரலாறு எங்கே? நம் நாட்டுப் பழங்குடிகள் என்று கூறப்படும் தோதவர்கள் இன்று எங்கே? எப்படி வாழ்கிறார்கள்? எண்ணிப் பாருங்கள்!

★

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

இடுப்பை நன்றாகத் தடவிப் பார்த்துக்கொண்டார். அந்தச் சாமி!

“இருபது சவரன் தங்க வடத்தில் தொடங்கி வெள்ளிக் கண்ணடக்கம் வரை ஐயர் பட்டியலைப் படித்து முடித்து, ‘எதையுமே பாவி விட்டுவைக்கவில்லை’ என்பதை மட்டும் சற்று அழுத்தமாகவே கூறினார்.

“பாவிப் பய......அந்த வைர மோதிரத்தைக் கூடவா எடுத்து கிட்டு போகணும்...

சண்டாளப் பய...வைர மோதிரத்தையாவது விட்டுட்டுப் போகக் கூடாதா?”

ஐயர் அடிக்கடி அங்கலாய்த்துக் கொண்டார்.

“பட்டியலை எதுக்கும் ஒருமுறை சரிபார்த்துக்குங்கோ; இருபத்தோரு ‘அயிட்டம்’; எல்லாத்தையும் எழுதிக்கிட்டிங்களா? சரியா எழுதிக்கிட்டிங்களா?”

ஐயர் பட்டியலைச் சரிபார்ப்பதில் எடுத்துக்கொண்ட கவனத்தைப் பார்த்து “அடடா, சாமின்னு சாமிதான்”னு சிலர் பாராட்டினர்.

“வைர மோதிரத்தைப் பட்டியல்லே எழுதிக்கிட்டிங்களா?”

“பதினேழாவது அயிட்டந் தானே வைர மோதிரம்”

கூடியிருந்தவர்களுக்கு வைர மோதிரம் காணமல் போய்விட்டது என்பது கனவில்கூட நினைவிருக்கும் நிலையை ஐயர் உண்டாக்கிவிட்டார்.

இடுப்பில் தளர்ந்த துண்டை மறுமுறையும் இறுக்கிக் கட்டிக் கொண்டு, மற்றொரு முறை தடவிப் பார்த்துக் கொண்டார் ஐயர்.

அதிகாரி தன் வேலையை முடித்துக்கொண்டு புறப்பட ஆயத்தமானார்.

“நான் வரேன் சாமி...இப்பவே மெட்ராசுக்குச் செய்தி அனுப்பறேன். துப்பறியும் நாயை அனுப்பச் சொல்லி கேட்டிருக்கேன்...... நாளைக்கே வந்துடும் ... மூலஸ்தானத்திலே கொண்டுவிட்டா திருட்டுப் பய தன்னால அகப்பட்டுக்கறான்...”

“நல்ல வேலை செய்ஞ்சிங்கசார்; நாய்வரட்டும், ஏரிக்காத்தாரப்பன் சக்தியைத் திருட்டுப்பய தானு தெரிஞ்சுக்கறான்...”

“ரொம்ப சரியாச் சொன்னிங்க; துப்பறியும் நாய்களிலேயே இது கெட்டிக்கார நாய் ... நிச்சயமா திருடனைக் காட்டிக்கொடுத்திடும்”

ஐயர் இந்தப் பேச்சுக்களைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

போலீஸ் அதிகாரியினையே அவர் பார்த்துக் கொண்டு பெருமூச்சு விட்டார்.

“ஏரிக்காத்தாரப்பன் சொத்து போனவன் வீட்டிலே எழவுதான் விழும்...சாமி சொத்தைச் சாப்பிட்டா சர்வ நாசந்தான்...”

“எதுக்கு செட்டியாரே சபிக்கிறீங்க. எல்லாம் அவனுக்குத் தெரியும்”

ஐயரின் பெருந்தன்மை அங்குக் கொடிகட்டிப் பறந்தது.

“அப்பா அப்பா” என்ற குரல் கேட்டுத் திரும்பியவர் தந்தியும் கையுமாக நின்ற தன் கடைகோட்டிப் பையனைப் பார்த்தார்.

தந்தியை வாங்கிப் பிரித்துப் படித்தார். அறுபது வயதிலும் கண்ணாடி தேவையில்லாத அவர் இளமையின் ரகசியம் என்ன என்ற கேள்வி சுற்றியிருந்தவர்களுக்கு உண்டானது.

திருமணமாகிப் பதினைந்து ஆண்டுகளாகப் பிள்ளையில்லாமல் தவித்த தன் முதல் மகனுக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது என்ற செய்தியைப் பூரிப்போடு சொன்ன ஐயருக்குக் கூடியிருந்தவர்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

ஏரிக்காத்தர்ரப்பனின் சக்திக்கு ஐயரின் பேரப்பிள்ளை சாட்சியாகப் பேசப்பட்டான்.

அதே நேரத்தில் திருடனே பல மடங்கு அதிகமாகச் சபிக்கப்பட்டான்.

“சிவன் சொத்து குலநாசம்’னு சொல்லுவாங்கலே, அது பொய்யாகவா போயிடும். அந்தத் திருட்டுப் பய குலமே நாசமாகத்தான் போகுது”

உண்மையான இந்த பக்தனுக்கு ஐயருக்குக் கிடைத்த பேரப்பிள்ளை பற்றிக் கவலையே இல்லை. கடவுளுக்கு ஏற்பட்ட கஷ்டம் அவனைக் க்லங்க வைத்தது.

ஆனால், ஐயரோ தன் குலந் தழைக்க வந்த பேரப்பிள்ளையின் நினைவிலேயே மூழ்கினார்.

தன் அதிர்ஷ்டத்தை எண்ணி மகிழ்ந்தார். எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு ஓடிய திருடன் வைர மோதிரத்தை மட்டும் தனக்காகவே விட்டு விட்டதைப்போல, தவறவிட்ட நல்ல காலத்தை எண்ணி மகிழ்ந்த ஐயருக்குப் பேரப்பிள்ளை இரட்டிப்பு இன்பத்தைக் கொடுத்தான்.

இடுப்பை மற்றுமொரு முறை தடவிப் பார்த்துக்கொண்ட ஐயர், பொடிமட்டையோடு சேர்ந்து தட்டுப்பட்ட மோதிரம் பத்திரமாக இருப்பதை உணர்ந்து பரவசமடைந்தார்.

ஊரார்க்கோ, நாளைக்கு வரப்போகும் துப்பறியும் நாய் பற்றியும், அது மூலஸ்தானத்துக்குள் சென்று மோப்பம் பிடித்து வருவது பற்றியும், ஓடிச்சென்று யாரோ ஒருவனைத் திருடனென்று பிடிப்பது பற்[illegible]ம் நினைப்பெல்லாம்.

தாங்கள் வெளியே [illegible]ம், மூலஸ்தானத்துக்குள் நாளைக்குப் போகப் போகின்ற துப்பறியும் நாய் செய்த புண்ணியத்தைப் பற்றி அவர்கள் எண்ணி மகிழ்ந்தாலும், வைர மோதிரமும், தங்கப் பேரனும் கிடைத்த மகிழ்ச்சியில் ஐயர் மிதந்தாலும், ஒரு உண்மையான பக்தன் மட்டும் “சிவன் சொத்து குல நாசம்” என்று உளறுவதை மட்டும் விடவில்லை.

சரியான அப்பாவி அவன்!! ஃ

...யர் வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3